# நகரத்தார்
# திருமண நடைமுறை




## பேப்பர் ஷாப்பி

84, சாமி நாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை – 600 002
தொலைபேசி : 2854 5533, 2859 3366, 4322 7473
அலைபேசி : 98409 30792, 98841 34446
Email : paper_shoppe@yahoo.com

# பொருளடக்கம்


| | பக்கம். |
|---|---|
| நகரத்தார் திருமண நிகழ்ச்சிகள் | 2 |
| ஐம்பது, அறுபது, எண்பது - வாரியார் சுவாமிகள் | 33 |
| சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம், மகாபிஷேக விழாக்கள் நடைமுறை | 34 |
| நகரக் கோவில்களின் விபரம் | 39 |
| நகரத்தார் குடும்ப சிறப்பு நிகழ்ச்சிகள் | 42 |

# நகரத்தார் திருமணம்

நகராத்தார்கள் தொன்று தொட்டு வரும் மரபுகளைத் தொடர்ந்து பின்பற்றுவார்கள் அவர்கள் திருமணத்தில் சில சடங்குகளையும் பழக்க வழக்கங்கயையும் அறிவுக்கு ஒப்பவகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நகர்த்தார்கள் 96 ஊர்களில் (தற்பொழுது 76 ஊர்களில்) வசித்து வருகிறார்கள். அவர்கிடையே கோவிலை அடிப்படையாக வைத்து ஒன்பது பிரிவுகள் உள்ளது. ஒன்பது பெரும் பிரிவுகளில் 1 முதல் 3 வரை உள்ள பிரிவில் உட்பிரிவுகள் உண்டு. 4 முதல் 9 வரை உள்ளவற்றில் உட்பிரிவுகள் கிடையாது.

ஒன்பது பிரிவினரும் தங்களுடைய பிரிவிற்குளே திருமணம் செய்து கொள்வதில்லை.

இளையாற்றங்குடிக் கோவிலிருந்து இரணியூர்க் கோவிலாரும், பிள்ளையார்பட்டிக் கோவிலாரும் பிரிந்து வந்ததினால் அவர்கள் இருவரும் நெருங்கிய ரத்தக் கலப்புடையவர்களாக ஆகிவிடுவதால் இவர்களுக்குள் கொள்வினை, கொடுப்பினை இல்லை.

மாத்தூர் கோயிலாரும், இளையாற்றங்குடி கோயிலாரும் அதிகப் பிரிவுகள் என்பதால் அவ்விரு கோயிலாரும் தம் கோவிலில் தம் பிரிவைத் தவிர்த்த மறுபிரிவில் பெண் எடுப்பார்கள், கொடுப்பார்கள்.

வழிமுறை தொடரப் பிள்ளை கூட்டுபவர்கள் தம் கோவிலைச் சேர்ந்த பிள்ளையைத்தான் கூட்டுவார்கள்.

தலைமுறை வளரவளர மரபுகள் மறப்பது இயற்கை அதனால் வரும் தலைமுறைகள் அறிந்து கொள்வதற்காக திருமணம், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம், மகாபிஷேக விழாக்களின் நடைமுறைகள் மற்றும் நகரத்தார் குடும்ப நிகழ்ச்சிகளை வெளியிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

இப்படிக்கு,

**R. லெட்சுமணன்** – ஆ. தெக்கூர்

பேப்பர் ஷாப்பி, சென்னை – 2.

# நகரத்தார் திருமண நிகழ்ச்சிகள்

**கல்யாணம் பேசி முறைச்சிட்டை எழுதிக் கொள்ளுதல் :**

முறைச்சிட்டை எழுதிக் கொள்ளும்போது கழுத்துருவுக்கு பொன் கொடுக்கும் நேரம், திருப்பூட்டும் நேரம், குடி அழைப்பு, பெண் அழைப்பு நேரங்கள் எழுதிக் கொள்ளுவார்கள்.

**பேசி முடித்துக் கொள்ளுதல் :**

திருமணத்தை உறுதி செய்து கொள்ளும் நிகழ்ச்சி. இதை நிச்சயதார்த்தம் அல்லது கெட்டி பண்ணிக் கொள்ளுதல் என்றும் கூறுவர். இந்நிகழ்ச்சி மணமகள் வீட்டில்தான் நடைபெறும். பையனுடைய பெற்றோர்கள் உற்றார், உறவினருடன் விரளி மஞ்சள், வெற்றிலை பாக்கு, கற்கண்டு, பழம் முதலியவற்றுடன் வருவார்கள். திருமணம் பேசிக் கொண்ட விவரங்களை இன்னார் மகனுக்கு இன்னார் மகளைத் திருமணம் செய்வதாகவும், இன்னின்ன முறைகள் பெண் வீட்டாரும் பையன் வீட்டாரும் செய்வது என்று இரண்டு பிரதிகள் எழுதி தாம்பாளத்தில் மலர், வெற்றிலைபாக்கு, மஞ்சள் முதலியன வைத்து இருவீட்டு பெரியவர்களும் ஒருவருக்கொருவர் கொடுப்பார்கள். பிறகு சிற்றுண்டி அளித்ததும் பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் சொல்லிக் கொண்டு செல்லும்போது அவர்களை கௌரவிப்பதற்காக பழம், வெற்றிலைபாக்கு, ரொக்கம் முதலியன கொடுத்து வழியனுப்புவார்கள். இந்நிகழ்ச்சி இப்பொழுது காலம், செலவு கருதி திருமணத்திற்கு முதல்நாள் வைத்துக் கொள்கிறார்கள்.

**முகூர்த்தக் கால் ஊன்றுதல் :**

திருமணத்திற்கு ஒரு வாரம் முன்னர் மணமகன், மணமகள் இருவருடைய வீடுகளிலும் நடைபெற வேண்டிய நிகழ்ச்சி. ஒரு நல்ல நாளில், குறிப்பிட்ட நல்ல நேரத்தில் கொட்டகை போடுபவர் ஒருவரை வைத்து வீட்டின் நடுவாசலில் ஈசானிய மூலையில் (வடகிழக்கு மூலை), மஞ்சள் தடவிய ஒரு மூங்கில் கழியின்



முனையில், மாவிலையைக் கட்டி ஊன்றி வைப்பார்கள். பிறகு அதற்குத் தேங்காய் உடைத்து கற்பூர தீபம் காட்டுவார்கள். முகூர்த்தக்கால் ஊன்றிய பிறகு இருவீட்டாரும் திருமணச் சடங்குகள் எல்லாம் முடிந்து, காய்ச்சி ஊற்றிக் கொள்ளும்வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளக் கூடாது.

**கல்யாணம் சொல்லுதல் :**

மாப்பிள்ளை வீட்டார் மாப்பிள்ளைக்கு அப்பத்தாள், ஆயா வீடுகளில் மணமக்களின் தந்தை அல்லது மூத்த சகோதரர் தேங்காய் சட்டி கொண்டு சென்று கல்யாணம் சொல்லும் வீட்டில் தடுக்கில் உட்கார்ந்து என் மகனுக்கு (அல்லது மகளுக்கு) 'இன்ன நாளில் கல்யாணம்' என்று சொல்லி அழைக்க வேண்டும். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு வெற்றிலை பாக்குடன் ரூபாய் வைத்துத் தருவார்கள். அதுவே பாக்கு பணம்ஆகும். முகூர்த்தக்கால் ஊன்றும் நாளில் கல்யாணம் சொல்லுவார்கள். மாப்பிள்ளை கல்யாணமாக இருந்தால் சடங்கு செய்பவர்களுக்கு தேங்காய் வைத்துச் சொல்ல வேண்டும். பெண் கல்யாணமாக இருந்தால் அத்தைகளுக்கு தேங்காய் வைத்துச் சொல்ல வேண்டும்.

**கோவிலில் பாக்கு வைத்தல் :**

இரு வீட்டாரும் அவரவர்கள் நகரக் கோவிலில் மூன்றுநாள் முன்பாகப் போய் பாக்கு வைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக 4ஆம் தேதி திருமணம் என்றால் 1 ஆம் தேதி காலை முதல் மாலைக்குள் பாக்கு வைக்க வேண்டும் மணமகன், மணமகள் இருவரின் கோவில் பிரிவு வகை, மற்றும் மணமக்கள் பெயர், தகப்பனார் பெயர் மற்றும் விலாசங்கள், கல்யாண நாள், நேரம், இடம் ஆகியவற்றைக் குறித்துக் கொண்டு பங்காளிகள் யாரேனும் ஒருவர் போய்ப் பாக்கு வைத்து பதிவு செய்து அதற்குரிய காணிக்கை செலுத்தி வரவேண்டும். இதற்கு திருமண அழைப்பிதழும், வெற்றிலை பாக்கும் கொண்டு செல்ல வேண்டும். இதுவே நமது சமூகத்தில் திருமணத்தை பதிவு செய்யும் முறையாகும்.

இரணிக்கோவில், பிள்ளையார்பட்டிக் கோவிலார் இருவரும் தத்தம் கோவிலில் பாக்கு வைப்பதோடு இளையாத்தாங்குடியிலும் பாக்கு வைப்பது மரபு.

திருமணத்திற்கு முதல்நாள் அந்தந்தக் கோவிலிருந்து மணமக்கள் வீட்டிற்கு இரண்டிரண்டு மாலைகள் வரும். அதைப் பெண்கள்சங்கு ஊதிவாங்கி நடுவீட்டில் வைப்பார்கள். மாப்பிள்ளை வீட்டில் வாங்கி வைத்த

மாலைகள் இரண்டில் ஒன்றை மாப்பிள்ளை திருமணத்தன்று அணிந்து கொள்ள வேண்டும். மற்றொன்றைத் திருப்பூட்டச் செல்லும்பொழுது கொண்டு சென்று முதலில் மாப்பிள்ளை பெண்ணுக்கு அம்மாலையை அணிவிப்பார். பெண் வீட்டில் வாங்கி வைத்த மாலைகளில் திருமணத்தன்று பெண் பகவனம் செய்து கொள்ளும் போது அணிந்து கொள்வது வழக்கம். மற்றொன்றை அரசாணிக்காலில் கட்டி விடுவார்கள்.

மணமக்களுடைய தந்தையோ அல்லது பங்காளிகளில் ஒருவரோ அவரவர்களுடைய சொந்த ஊரில் உள்ள நகரச் சிவன் கோவிலுக்குச் சென்று மேளத்திற்கு எழுதிவைக்க வேண்டும். திருமணம் முடிந்தபின் மணமகனை அந்த ஊர்ப் புள்ளிகளில் ஒருவராக ஏற்றுக் கொள்வார்கள்.

**முளைப்பாலிகை தயார் செய்தல் (மொளப்பாரி) :**

மணமகன் வீட்டில் முளைக்கும் திறனுள்ள நெல்,அவரை(மொச்சை), துவரை, பாசிப்பயிறு, பருத்தி, கேழ்வரகு, உளுந்து ஆகிய தானியங்களை பானையில் போட்டு நீர் ஊற்றி முளைவிடச் செய்யவேண்டும். பிறகு அந்தத் தண்ணீரை வடித்துவிட்டு மீண்டும் தண்ணீர் ஊற்றி வைப்பார்கள். திருமணத்திற்கு முதல்நாள் ஒருபாத்திரத்தில் சிகப்புத் துணி வைத்து அதில் இந்தத் தானியங்களை வைத்து இறுகக்கட்டி வைத்து விடுவார்கள். இப்படிச் செய்தால் அதில் உள்ள எல்லா தானியங்களும் முளைவிட்டு இருக்கும். இதன் நோக்கம் திருமணம் செய்துகொள்ளும் மணமக்களும் அவர்கள் குடும்பமும் முளைவிட்டுப் பல்கிப் பெருகி வாழ வேண்டும் என்பதே.

திருமண நாளன்று மொளப்பாரியை மணமகள் வீட்டிற்கு எடுத்துச் செல்லவேண்டும்.

**கோட்டை நெல் கட்டுதல் :**

ஒரு மரக்கால் நெல்லை (பெரியபடி 2) ஒரு துணிப்பையில் கட்டி, வைக்கோல் பிரியால் பந்துபோல் சுற்றி கட்ட வேண்டும். இதை திருப்பூட்ட போகையில் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதை சாமி வீட்டில் நடுவில் வைப்பார்கள். மணமகன்அரசாணிக் கால், அக்னி ஆகியவற்றை வலம் வந்தவுடன் இந்த கோட்டையை தாண்டி சாமி வீட்டுக்குள் செல்லவேண்டும்.



## திருமணத்திற்கு முதல் நாள்

**கூடி ஆக்கி உண்ணுதல் :**

திருமணத்திற்கு முதல்நாள் உறவினர்கள் எல்லோரும் கூடி ஆக்கி உண்ணும் நிகழ்ச்சி. நம்மில் பெரும்பாலோர் ‘படைப்பு’ என்று நம் முன்னோரை வழிபடுகின்ற நாளாக இதனை அமைத்துள்ளனர்.அன்றைய தினம் அவரவர் பழக்கப்படி குல தெய்வங்களுக்கு பணம் முடிப்பார்கள்.

**திருவிளக்கு ஏற்றுதல் :**

அப்பத்தாள் அல்லது அத்தையை அழைத்து நடுவீட்டில் விளக்கு ஏற்றுவது திருவிளக்கு ஏற்றுதல் என்று அழைக்கப்படுகிறது.

**கொழுமேளம் :**

மேளக்காரர்கள் வந்ததும் சங்கு ஊதி நல்ல காரியத்தை கொழுகும் மேளத்தை வாசிக்கச் செய்யவேண்டும்.

**மணைபோடுதல் :**

பெண் வீட்டில் சுமங்கலிப் பெண்கள் ஊரணியிலிருந்து மணைக்கு மண் அவரவர்கள் ஊர் வழக்கப்படி எடுத்து வருவார்கள். எடுத்து வந்த மண்ணை குழைத்து ஐந்து செங்கற்களின்மேல் வைத்து சங்கு ஊத அதன் மேல் மணையை எடுத்து வைக்கவேண்டும்.


வெளியூர்த் திருமணமாக இருந்தால் பெண் வீட்டில் மட்டுமே இச்சடங்கு நிகழும். உள்ளூராக இருந்தால் இருவீட்டிலும் நடக்கும். பங்காளி மற்றும் உறவினர் வீட்டுப் பெண்கள் வளவுக்குள் திருமண வீட்டிற்கு எதிரே மணை போடுவார்கள். பெண் வீட்டில் இரட்டை மணையும், மாப்பிள்ளை வீட்டில் ஒற்றை மணையும் வைப்பது மரபு.

**மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல் :**

திருமணத்திற்கு இரண்டொரு தினங்களுக்கு முன் மணமகன் கால்களில் இரண்டாவது விரல்களில் வெள்ளியினாலான மோதிரம் ஆசாரியை வரச் சொல்லி அணிவிப்பார்கள்.

**தும்பு பிடித்தல் :**

முதல் நாள் இரவு படைப்பு முடிந்ததும் இருவீட்டாரும் திருமணம் நிகழ்கின்ற நடு (அறையில்) வீட்டில் அன்று காலை குத்துவிளக்கு ஏற்றி வைத்து



அந்த அறையின் வெளிச் சுவற்றிலும் உள்வீட்டுச் சுவற்றிலும், கதவிலும் மங்கலத்தைக் குறிக்கும்படி கோலக் கூட்டினால் ஏட்டுக்கயிறு கொண்டு படத்தில் காட்டியது போன்ற வடிவத்தில் வரைவார்கள். இதை கணவன் மனைவியோ அல்லது இரண்டு மங்கலப் பெண்டிரோ செய்வது வழக்கம். இதன் வடிவத்தைப் பார்க்கும்போது இறைவனை அந்த வீட்டைக் கோவிலாக எண்ணி எழுந்தருளச் செய்வது போலத் தோன்றும்.

**மாற்றுக்கட்டுதல் :**

திருமண மேடைக்கு மேலே நீல நிறம் அல்லது பிற நிறங்களில் (கருப்பு நிறம் தவிர) மாத்துச் சேலை இரண்டை சலவைத் தொழிலாளி(தற்பொழுது பங்காளிகள்) திருமணத்திற்கு முதல் நாள் கட்டிவிடுவார்கள். அக்காலத்தில் பல்லி முதலான பூச்சிகளோ, தூசியோ மணமக்கள் மீது விழுந்துவிடாமல் பாதுகாப்பதற்காகவே இப்படி மாற்றுக் கட்டியிருக்கிறார்கள்.

**அரசாணிக்கால் கட்டுதல் :**

முன்காலத்தில் மன்னர்கள் நேரில் வந்து அவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதாகவும் ஒரே நேரத்தில் பல திருமணங்கள் நடைபெறும் அளவு மக்கள் தொகை பெருகியதும் அரசன் நேரில் வர இயலாத நிலையில் அரசன் ஆணையை முன்னிறுத்தித் திருமணங்கள் நடைபெற்றிருக்கலாம். அதுவே பின்னர் அரசாணிக்காலாக மாறியிருக்கலாம்.

பெண் வீட்டில் மணைக்கு எதிரில் கோலமிட்ட இடத்தில் பங்காளிகளைக் கொண்டு அரசாணி மேடையை வைத்து அதிலுள்ள பள்ளத்தில் பாலை ஊற்றி பவளத்தைப் போட வேண்டும். அதன் மேல் மூங்கில் கம்பை ஊன்றி அதனைச் சுற்றிலும் கம்பு தெரியாதவாறு கிளுவை, பாலை இரண்டு குச்சிகளையும் இணைத்து அரச இலை, மாவிலை முதலியவற்றால் சுற்றி கீழிருந்து மேலாக கயிறு கொண்டு கட்டவேண்டும்.

இதன் அருகில் உயரம் குறைந்த ஸ்டூலில் சரவிளக்கு வைத்து நல்லெண்ணை தீபமிட வேண்டும். விளக்கை திருமணத்தன்று காலையில் ஏற்றி நிகழ்ச்சிகள் முடியும் வரை எரியவிடவேண்டும்.

**முதல் சீர் வைத்தல் :**

கல்யாணத்திற்கு முதல் நாள் காலையில் பெண் வீட்டிலிருந்து பெண்கள் மட்டும், மாப்பிள்ளை வீட்டிற்கு இருவீட்டாரும் பேசிக் கொண்டபடி குடம், செம்பு,



விளக்கு ஆகியவற்றுடன் மஞ்சள், உப்பு, புளி, பஞ்சு, விபூதி, பச்சரிசி, பாக்கு ஆகிய சாமான்களுடன் செல்லவேண்டும். இந்நிகழ்ச்சி உள்ளூராக இருந்தால் மட்டும் நடைபெறும்.

**மறுசீர் வைத்தல் :**

திருமணத்திற்கு முதல்நாள் மாலையில் பெண் வீட்டிலிருந்து மறுசீர் வைக்க ஆண்களும், பெண்களும் போகவேண்டும். ஆண்கள் தேங்காய் சட்டி, சரிகை வேஷ்டி, துண்டு, சங்கிலி, மோதிரம், கைக்கெடிகாரம், எலுமிச்சம்பழம், பூச்செண்டு, சீர்வைத்த சாமான் நோட்டு, மாமியார் சாமான் பணம் ஆகியவற்றைக் கொண்டு போக வேண்டும். இந்நிகழ்ச்சி இப்பொழுது கல்யாணத்தன்று காலையில் நடைபெறுகிறது.

**கழுத்துரு வாங்கச் செல்லுதல் :**

பங்காளிகள் இருவர் திருமணத்திற்கு முதல் நாள் பெண் வீட்டிற்குச் சென்று கழுத்து உரு உருப்படிகள் 31–ம் (சில ஊர்களில் 29–ம்), குச்சி, தும்பு, துவாளை உருப்படி ஆக 3ம், பிள்ளைத் தும்பு–1ம் தாலிச் சங்கிலியையும் வாங்கி வரவேண்டும்.

## திருமணத்தன்று பெண் வீட்டில்

**பூரம் கழித்தல் :**

மணமகளின் கன்னித் தன்மையை நீக்கி அவளை இல்லறத்திற்கு உரியவளாக மந்திரப் பூர்வமாக ஆக்குதலே இதன் நோக்கம். திருமணத்தன்று அதிகாலையில் மணமகளை நீராடச் செய்து, ஒரு சரமாலை மட்டும் கழுத்தில் அணிவித்து மணமேடைக்குப் பக்கத்தில் தடுக்கில் நிற்கச் செய்து மணமகளின் அம்மான் மனைவி அல்லது அத்தையோ அல்லது தாயோ பூரம் கழிப்பார்கள்.

மணமகளின் உடலில் ஏழு இடங்களில் அதாவது தலையிலும், தோள்பட்டைகள் இரண்டிலும், இடுப்பில் இரண்டு பக்கங்களிலும், இரண்டு பாதங்களிலும் வேப்பிலையை வைத்து இரும்பு சத்தகத்தினால் அல்லது மரக் குச்சியினால் தட்டி விடுவார்கள். சில வட்டகைகளில் புரோகிதர் விநாயகர் பூஜை, வருண கும்ப பூஜை செய்து பூரம் கழிப்பார்கள். இதன் பிறகு மீண்டும் மணமகள் ஒரு முறை நீராட வேண்டும்.

**மாப்பிள்ளை வீட்டிலிருந்து புறப்படுதல் :**

மணமகன் தன் வீட்டிலிருந்து புறப்படும்போது, மணமகனுக்கு அப்பத்தாள் மணமகனை நடுப்பத்தியிலிருந்து கோலத்திற்கு முன் நிறுத்தி அழகு ஆலத்தி எடுப்பார்கள். அழகு ஆலத்தியில் மூன்று ஆலத்திகள் இருக்கும். சதுரவடிவில் 4 திரிகளும், கூம்பு போன்ற இரு ஆலத்திகளிலும் ஒவ்வொரு திரியும் இருக்கும். மணமகனுக்கு முன்பு ஸ்லேட் விளக்கு (அரிக்கேன் விளக்கு) வைத்து ஆலத்தி எடுத்து விபூதி பூசி வழியனுப்பி வைப்பார்கள். அப்பத்தாள் இல்லையென்றால் மணமகனுக்கு அத்தை அல்லது வீட்டிற்குப் பெரிய பெண்டிர்கள் செய்வார்கள்.

உள்ளூர் திருமணமாக இருந்தால் மாப்பிள்ளை திருமணத்தன்று காலையில் பங்காளிகள் உறவினர்களுடன் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து சாமி கும்பிடுதல் மரபு. வெளியூர்த் திருமணமாக இருந்தால் மாப்பிள்ளை அழைப்பு நிகழும் கோவிலிலேயே இந்த அர்ச்சனை வழிபாடுகள் நிகழும்.

மாப்பிள்ளையின் தகப்பனார் அல்லது வீட்டிற்கு பெரியவர்கள் தேங்காய் சட்டியுடனும் திருப்பூட்டுத் தாம்பளத்துடனும், தாயார் சடங்குத் தட்டுடனும் சகோதரி பால் பானையுடனும், சங்கு ஊதி மாப்பிள்ளையை அழைத்துச் சென்று மாமக்காரர், தாயார், சகோதரியுடன் புறப்பட்டுச் செல்ல வேண்டும்.

**கழுத்து உருவிற்குப் பொன் கொடுத்தல் :**

கழுத்துரு என்பது மணமகள் வீட்டார் செய்ய வேண்டிய அணிகலன்களில் ஒன்று, ஆயினும் மணமகன் வீட்டாருடைய தாலிதான் அணிவிக்கப்பட வேண்டும் என்ற பழக்கத்தின் காரணமாக அவர்களுடைய பொன்னும் இந்த பெரிய தாலியில் சேர்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு குறிப்பிட்ட நல்ல நாளில் மணமகன் வீட்டார் பங்காளிகளையும், சொந்தக்காரர்களையும் அழைத்துக் கொண்டு, பொன், சந்தனம், குங்குமம், பூ, வெத்திலை பாக்கு தேங்காயுடன் எலுமிச்சம்பழமும் மாப்பிள்ளை வீட்டார் எடுத்துச் செல்ல வேண்டும். மணமகள் வீட்டில் அவர்களுடைய பங்காளிகள் உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் பொற்கொல்லர் ஒருவர் வந்து அவர்கள் தருகின்ற பொன்னை வாங்கித் தட்டிக் கொடுப்பார். இந்த கழுத்து உரு செய்வதற்கு நீண்ட நாட்கள் ஆகும் என்பதால் முன்கூட்டியே தங்கம் சேர்ப்பதற்கு இடம் வைத்து செய்து விடுவதால் திருமணத்தன்று காலை இந்நிகழ்ச்சியை நடத்தி மணமகன் வீட்டார் தரும் தங்கத்தை கழுத்திருவில் சேர்த்து விடுகிறார்கள்.



**மாப்பிள்ளை அழைப்பு :**

திருமணத்தன்று காலையில் மாப்பிள்ளை வீட்டார்கள், ஊர்ப் பொது இடத்தில் (கோவிலில்) வந்து இருப்பார்கள். மணமகள் வீட்டார் ஒரு பெரிய தட்டில் மணமகனுக்கு ஜரிகை வேஷ்டி, துண்டு, மாலை, சங்கிலி, கெடிகாரம், மோதிரம், எலுமிச்சம்பழம், பூச்செண்டு முதலியவைகளை மணமகள் வீட்டார் எடுத்துச் செல்ல வேண்டும். மணமகன் தங்கியிருக்கும் இடத்திற்கு மேளவாத்தியம், சங்கு முதலியன ஒலிக்க மணமகள் வீட்டு உறவினர்கள் ஊர்வலமாக வந்து அவற்றை அணிவித்து அழைத்துச் செல்வார்கள். மணமகனின் தந்தை ஒரு சட்டியில் பாக்கு, மஞ்சள் இரு தேங்காய்களை வைத்து எடுத்துச் கொண்டு வருவார்.

**விளக்கு வைப்பது :**

மாப்பிள்ளையை அழைத்து பெண் வீட்டிற்குள் கூட்டி வரும்போது நடுப்பத்திக் கோலத்தின் முன் நிற்க வைத்து பெண்ணின் அப்பத்தாள் அல்லது அத்தை வந்து ஆரத்தி எடுத்து விபூதி பூசி மாப்பிள்ளையை நடுவாசலில் கிழக்கு முகமாக உட்கார வைப்பார்கள்.

**பகவத்யானமும் காப்புக் கட்டுதலும் :**

திருமண வாழ்வு சிறக்க இறைவனை எண்ணி வழிபடுதலே பகவத்யானம், மணமகனுக்கு முதலிலும் மணமகளுக்குப் பிறகும் தனித்தனியே புரோகிதர் ஒருவர் சங்கல்பம் செய்து வைத்து கணபதி பூஜை செய்வார். பிறகு தாய்மாமன், மணிக்கட்டில் ஒரு சிறு வெள்ளி நாணத்தை (தற்போது 4 அணாக்காசு) சிகப்புத் துணியில் முடிந்து நுனி உடையாத விரளி மஞ்சளையும் சேர்த்துக் கட்டிவிடச் செய்வார்.

**திருப்பூட்டுதலுக்கு ஆசிர்வாதம் வாங்குதல் :**

இருவருக்கும் காப்புக்கட்டி முடிந்ததும் மணமகன் வீட்டிலிருந்து கொண்டு வந்த தாம்பளத்தில் உள்ள திருமாங்கல்யத்திற்கு (கழுத்துரு) இலட்சுமி பூஜை செய்து மணமகளுடைய தாய்மாமனும் அவர்தம் மனைவியும் வீட்டுப் பெரியவர்களிடம் காட்டி வாழ்த்துப் பெற்று நடுவீட்டில் கொண்டு போய் வைத்துவிடுவார்கள். மணமக்கள் இருவருக்கும் பகவத்யானமும், காப்புக்கட்டுதல் நடைபெறும் பொழுது அவரவர்கள் வீட்டுப் பெரியவர்கள், சுற்றத்தார்கள் அவர்களைப் பூமணம் இட்டு வாழ்த்துவார்கள்.

**பூமணம் இடுதல் :**

பகவணம் செய்யும்போது மலர்களை பசும்பாலில் நனைத்து மணமக்கள் உடலில் மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய மூன்று இடங்களிலும் தொட்டு வாழ்த்துதலே பூமணமாகும். இதை மூன்று முறை செய்ய வேண்டும். முதலில் மாமக்காரர்தான் செய்ய வேண்டும். அதேபோல் மாமக்காரர்தான் முடித்து வைக்கவேண்டும். மணவறையிலும் பூமணம் இடவேண்டும்.

**அரிமணம் இடுதல் :**

முளைப்பாலிகை கிண்ணங்கள் ஐந்திலிருந்தும் முளைவிட்ட தானியங்களைக் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப் போட்டு வாழ்த்துதல் அரிமணமாகும். பகவணத்தின் போது மணமக்கள் இருவருக்கும் அரிமண இடுதல் நடைபெறும். பின்னர் மணவறையின் போதும் தம்பதிகளுக்கு எல்லோரும் அரிமணம் இடுவார்கள்.

**திருப்பூட்டுதல் :**

மணமகளுக்கு, மணமகனின் வீட்டார் கொண்டு வந்த ஆடைகளை அணிவித்து நன்கு அலங்கரித்து மணமேடை மீது கிழக்கு முகமாக நிற்கச் செய்வார்கள். பின்னர் மணமகனை அழைத்து மணமகளுக்கு எதிரே நிற்கச் செய்வர். மணமகளின் கைகள் இரண்டையும் ஏந்தச் செய்து அதில் பச்சரிசி தேங்காய் முதலியவற்றைக் கொடுப்பார்கள். தேங்காயின் குடுமிப் பகுதி மணமகனை நோக்கி இருக்க வேண்டும். மணமகன் கோவிலிருந்து வந்துள்ள தீருநீற்றை தான் பூசிக் கொண்டு மணமகள் நெற்றியிலும் பூசவேண்டும். பிறகு கோவில் மாலையை மணமகள் கழுத்தில் அணிவிக்க வேண்டும். பின்பு பெரியவர் ஒருவர் துணையுடன் அவர் எடுத்துத் தருகின்ற கழுத்துருவை வாங்கி மேல்பாகத்தில் திருமாங்கல்யம் உள்ள பகுதி வருமாறு பெண்ணுக்கு அணிவித்துக் கழுத்தின் பின்புறம் மூன்றுமுடிச்சு போடவேண்டும். முதல் இரண்டு முடிச்சுக்களை மாப்பிள்ளையும் மூன்றாவது முடிச்சை நாத்தனாரும் போடுவது மரபு. பிறகு தாலியை அணிவிக்க வேண்டும். அதன் பின்னர் திருமாங்கல்யத்திலும் மூன்று முடிச்சுகளின் மீதும் சிறுதாலியிலும் மஞ்சள் தொட்டு வைத்து குங்குமம் இடவேண்டும்.

மணமகள் கையில் உள்ள பச்சரிசி, தேங்காய் முதலியவற்றை தாம்பாளத்தில் வைத்துவிட்டு மணமக்கள், இருவரும் மூன்றுமுறை மாலை மாற்றிக் கொள்ள வேண்டும். மணமகன் தான் முதலில் மாலையிட வேண்டும். பிறகு தம்பதிகள் ஒருவருக்கொருவர் இனிப்பை பரிமாறிக் கொள்வது இன்றைய வழக்கம்.



திருப்பூட்டி முடிந்ததும் மணமக்கள் மாமக்காரருடன் வளவு, முகப்பிலுள்ளவர்களிடம் போய் வணங்கி ஆசீர்வாதம் பெறவேண்டும்.

திருப்பூட்டுதலின் போதும், மாலைமாற்றும் போதும் கெட்டிமேளம் வாசிக்கச் சொல்ல வேண்டும். பிறகு அனைவருக்கும் ரொட்டி, மிட்டாய், சர்பத் கொடுக்க வேண்டும்.

**திருப்பூட்டும் முறைகள் :**

நகரத்தார் திருமணங்களில் திருப்பூட்டுதல் மூன்று விதமாக நடைபெறுகிறது. மேலவட்டகை எனப்பெறும் வலையபட்டி, மேலைச்சிவல்புரி, குழிபிறை ஆகிய பகுதிகளில் மாப்பிள்ளை மணையில் நிற்க, பெண் கீழே நிற்க திருப்பூட்டப்படுகிறது. கீழ்வட்டகை எனப்பெறும் காரைக்குடி, தேவகோட்டை, பள்ளத்தூர் ஆகிய பகுதிகளில் பெண் மணைமீது நிற்க, மாப்பிள்ளை கீழே நிற்க திருப்பூட்டப்படுகிறது. தெற்கு வட்டகை எனப் பெறும் நாட்டரசன் கோட்டை, ஒக்கூர், அலவாக்கோட்டை ஆகிய பகுதிகளில் அறைக்குள் மாப்பிள்ளையும் பெண்ணும் சரிசமமாக நின்று திருப்பூட்டுதல் நடைபெறுகிறது.

**இசைவு பிடிமானம் எழுதுதல் :**

இசைவு பிடிமான புத்தகங்கள் அச்சிடப்பட்டு கிடைக்கின்றன. அதில் தனித் தனியே இருதரப்பாரும் அவரவர்கள் கோவில் பிரிவுகள் விவரத்தினைப் பங்காளியைக் கொண்டு எழுதி மணமக்களின் தந்தைமார்கள் இருவரும் நடுவீட்டில் அமர்ந்து கையெழுத்துச் செய்து, மாப்பிள்ளை வீட்டார் எழுதியது பெண் வீட்டிலும் பெண் வீட்டார் எழுதியது மாப்பிள்ளை வீட்டிலும் இருக்கும்படியாக மாற்றிப் பெற்றுக் கொண்டு வைத்துக் கொள்ள வேண்டியது. இதில் எழுதிய பங்காளிகளும் கையொப்பம் இடவேண்டும்.

**திருப்பூட்டுச் சடங்கு :**

மணமகனின் தாயார் அல்லது சகோதரி அல்லது இருவரும் செய்கின்ற சடங்கு இது.

ஒரு சடங்குத் தட்டில் ஏழு கிண்ணங்கள் இருக்கும். அவற்றில் பிள்ளை யார், வெத்திலைபாக்கு ஒன்றிலும், மற்றவை ஒவ்வொன்றிலும் மஞ்சள், விபூதி, பச்சரிசி, உப்பு, புளிக்கு பதிலாக நெல், பஞ்சு முதலியவை வைக்க வேண்டும். ஒரு படியில் நிறைய நெல் வைத்து அதன் மேல் கத்திரிக்காய் ஒன்று வைத்திருப்பார்கள் (இதனை 'நிறை நாழி' என்பர்) ஒரு கெண்டிச் செம்பில் (மூக்கு வைத்த செம்பு) தண்ணீர் வைத்திருப்பார்கள். இவைகளை மணையின்

மீது கிழக்கு முகமாக நிற்க வைத்து, கீழே தடுக்கு போட்டு அதில் சடங்கு செய்கிறவர்கள் நின்று கொள்வார்கள். முதலில் சடங்கு தட்டில் உள்ள விபூதியை வலது கரத்தால் எடுத்து சடங்கு செய்கிறவர்கள் தான் பூசிக் கொண்டு, பிறகு பெண்ணுக்கும் பூச வேண்டும். இந்த ஏழுகிண்ணங்கள் ஒவ்வொன்றையும் மூன்று மூன்று முறை தொட்டு விபூதியைத் தானும் கழுத்தில் பூசிக் கொண்டு பெண்ணுக்கும் கழுத்தில் பூசவேண்டும். இவ்வாறு இருபத்தியொரு முறை பூசியதும் வலது கரத்தில் கெண்டிச் செம்பை எடுத்துக் கொண்டு மணமகள் கையில் ஒரு வெற்றிலையைக் கொடுத்து முதலில் நிறை நாழியை சடங்கு செய்பவர் இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையினால் கெண்டிச் செம்புத் தண்ணீரை மணமகள் கையில் உள்ள வெற்றிலையில் ஊற்றுவார். மணமகள் அந்த நீரைப் பாதங்களில் வடித்துவிட்டு இரு கைகளினாலும் வெற்றிலையை நெற்றியில் வைத்துவணங்குவாள். இச்சடங்கு மூன்று முறை நிகழும். இதுபோலச் சிலேட்டு விளக்கு பிள்ளைக் குழவி முதலியவற்றை வைத்துக் கொண்டு சடங்கு செய்வர். சடங்குகள் முடிந்ததும் சிலேட்டு விளக்கை நேராக வீட்டுக்குள் வைக்க வேண்டும். மற்ற பொருள்களை மணமகளின் பின்புறமாகச் சுற்றி இடவலமாகக் கொடுத்து வீட்டுக்குள் வைக்க வேண்டும்.

**மாப்பிள்ளை கோவிலுக்குப் போய் வருதல் :**

இந்நிகழ்ச்சி திருப்பூட்டுச் சடங்கிற்குப் பின் நடைபெறும். மாப்பிள்ளை இரு மாமக்காரர்களுடனும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வரவேண்டும்.

**பூ எறிதலும் பெண் :**

இந்நிகழ்ச்சி மாப்பிள்ளை கோவிலுக்குச் சென்று வந்தபின் நடைபெறும். மாப்பிள்ளை வீட்டினுள் நுழையும் பொழுது, மணமகளின் சகோதரர்கள் பூ தூவி வரவேற்பார்கள். இதுவே பூ எறிதலாகும். இதன் பின் பெண்ணின் அத்தை பெண்ணை அழைத்துச் சென்று மாப்பிள்ளையிடம் காண்பிப்பார்கள். இதுவே பெண்ணெடுக்கிக் காட்டுதலாகும்.

**மணவறைச் சடங்கு :**

புரோகிதர் இச்சடங்கை நடத்தி வைப்பார். விநாயகர் பூசை, வர்ணகும்ப பூசை, அக்கினி வளர்த்து நவக்கிரக ஓமம், ஆயுள் ஓமம், தீவலம் வருதல், அரிமணம் இடுதல், பூமணம் இடுதல் ஆகியவை நிகழும். இத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாம் மாமக்காரர்கள் முதலில் செய்த பிறகே மற்றவர்கள் செய்ய வேண்டும். பிறகு மணமகளின் உடன் பிறந்தவரில் ஒருவர் மணமகனுக்கும்,



மணமகனின் உடன் பிறந்தவர்களில் ஒருவர் மணமகளுக்கும் திரட்டுப்பால் தடவுவார்கள். வாழ்க்கை வளமுடன் இனிமை பொருந்தியதாக அமையட்டும் என்பதற்கு அறிகுறியாக திரட்டுப்பாலுக்குப் பதிலாக வாழைப்பழத்தை தின்பதற்குக் கொடுக்கின்ற நிகழ்ச்சிதான் இது. காலப்போக்கில் வாழைப்பழத்தை மணமக்களின் வாயில் தடவி, வேடிக்கையாகச் சிரித்து மகிழ்கின்ற நிகழ்ச்சியாக மாறியிருக்கிறது.

பிறகு மாப்பிள்ளை தலையில் எண்ணெய் தண்ணீர் முதலியவற்றைப் பெண்ணும், பெண்ணின் தலையில் மாப்பிள்ளையும் மாவிலையால் தொட்டு வைப்பார்கள்.

அதன்பிறகு மாப்பிள்ளையின் எதிரில் ஒரு முக்காலி வைத்து அதன்மீது ஒரு சட்டியை வைத்து அதில் சோறு, பருப்பு, நெய், வாழைப்பழம் முதலியவற்றைப் பரிமாறிய பின் மாப்பிள்ளை அதைச் சுவைத்துப் பார்க்க வேண்டும். பிறகு மாப்பிள்ளை கை அலம்புவதற்கு பெண் நீர் ஊற்ற வேண்டும்.

பிறகு மாமக்காரர்கள் இருவரும் மணமக்கள் தலைகளில் கொண்டை மாலைகளை மூன்று முறை மாற்றி மாற்றி வைப்பார்கள். பின்னர் பெண்ணின் தந்தை தலைச் சீலையில் பணம் முடித்தல் வேண்டும்.

மணமக்கள் முன் இருக்கின்ற முக்காலி மீது உள்ள சட்டியில் அரிசி, மஞ்சள், தேங்காய் இவைகளை வைத்து ஒரு பட்டுத்துணியால் (மாமப்பட்டு) இரு மாமக்காரர்களும் மூடினாற்போலப் பிடித்திருக்க, மணமக்கள் இருவரும் அதை எடுத்து மூன்று முறை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பட்டுத் துண்டு போர்த்திய நிலையிலேயே மணமக்கள் இருவரும் எழுந்து அரசன் ஆணைக்காலையும் அக்னியையும் சுற்றி வலம் வந்து, நடு வீட்டில் சென்று அமர வேண்டும். மாமக்காரர் அந்தப் பட்டுத் துணியை விலக்கிய பிறகு அந்தப் பொருள்களை அங்கு வைத்துவிட்டு எழுந்து வெளியே வரவேண்டும்.

**தலைச்சீலையில் முடித்தல் :**

மணமகளின் தந்தை தன் மகளை மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் போது வழிச் செலவுகளுக்கு கொடுக்கின்ற முதல் பணப் பரிசுதான் ‘தலைச் சீலையில் முடிதல்’ என்பதாகும். மணமகளின் தந்தை ஒரு சிறு தொகையை மணமகனின் தலையில் வைப்பார். அதனை எடுத்து மாமக்காரர் மணமகன் தந்தையிடம் கொடுத்துவிடுவார். பின்னர் இந்தத் தொகை மணமகளுக்கு கொடுக்கின்ற ஸ்ரீதனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

**வேவு எடுத்தல் :**

தலைப் பிள்ளைக்கு மட்டும் முதலில் மாம வேவு எடுத்தல் வேண்டும் அதற்கு பெண் வீட்டார் தயாரித்துள்ள பச்சரிசி, இலைக்கட்டு, பரங்கிக்காய், வாழைப்பழம், கற்கண்டு, மஞ்சள், பழங்கள் முதலியவற்றைப் பணியாட்கள் தலைமேல் வைத்து பெண்ணுக்கு ஆயாள் வீட்டுப் பங்காளிகள் எல்லோரும் மேள தாளத்துடன் கொண்டு வருவார்கள். பெண் வீட்டு முகப்புப் பத்தியில் கோலத்திற்கு முன்பாக அவர்களை நிற்கச் செய்து, பெண்ணின் அப்பத்தாள் குத்து விளக்கு வைத்து பின் தாய் மாமன் வீட்டு ஆண்கள் தலையில் புழுங்கலரிசி படி 2, தேங்காய் 2, கத்திரிக்காய் 2, கொண்ட வேவுக்கடகத்தைத் தலையில் வைத்துக் கொள்ள முதலில் பெண்ணும், பிறகு அவள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் ஒவ்வொருவராக வந்து 5,7,9 என்ற ஒற்றைப் படை எண்ணிக்கையில் இறக்கி நடு வீட்டில் கொண்டு போய் வைத்து விடவேண்டும்.

மாப்பிள்ளை தலைப் பிள்ளையாக இருந்தால் மாப்பிள்ளையின் ஆயாள் வீட்டாரும் இந்த வேவு எடுத்தல் வேண்டும். ஆயாள் வீட்டு ஆண்கள் தலையிலிருந்து மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் இறக்க வேண்டும்.

பிறகு பெண் வீட்டார் ‘கல்யாண வேவு’ எடுத்தல் வேண்டும். கல்யாண வேவின் போது பெண் வீட்டு ஆண்களான பெண்ணின் தந்தை, பெண்ணின் பெரியப்பா, சிற்றப்பா, பெண்ணின் அண்ணன், தம்பிகள், பெண்ணின் அண்ணன் தம்பி மகன்கள், பெண்ணின் அய்யாக்கள், வீட்டுப் பங்காளிகள், கூடிக்கிற பங்காளிகள், பெரும் பங்காளிகள் ஆகியோர் தலையில் வேவு கடகத்தை வைத்துக் கொள்ள மாப்பிள்ளை வீட்டுப் பெண்களான கல்யாணப் பெண் மாப்பிள்ளையின் தாயார், மாப்பிள்ளையின் ஆச்சி, தங்கைமார், மாப்பிள்ளையின் ஆச்சி தங்கச்சி மக்கள், மாப்பிள்ளையின் பெரியப்பச்சி, சித்தப்பார் மகள்கள் இறக்கி இருவருமாக நடு வீட்டிற்குள் கொண்டு போய் வைத்தல் வேண்டும்.

**பணம் எழுதுதல் :**

திருப்பூட்டி முடிந்ததும், நேரத்தை அனுசரித்து மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகளும், பெண் வீட்டுப் பங்காளிகளும் தனித் தனியாக இருந்து பணம் எழுத வேண்டியது. ஒரு முக்காலியில் சருவச் சட்டி வைத்துப் பச்சைப் பாலை ஊற்றி, வெற்றிலையைக் கிள்ளிப் போட்டு அதில் ஒரு ரூபாய் நாணயத்தையும் போட்டதன் பின் பணம் எழுதவேண்டும்.



முதலில் அந்த வகை ஆட்கள், அப்புறம் பங்காளிகள், பிறகு உறவினர்களாகவும் பங்காளிகளாகவும் உள்ளவர்கள், பின்பு மாமக்காரர்களையும் எழுதிப் பின்பு சடங்குகாரர்கள் சம்பந்தப்புரங்கயையும் உறவினர், நண்பர்களையும் எழுதி ஒன்றாகப் பணத்தைச் சிகப்புத் துணியில் முடிந்து, மாப்பிள்ளை வீட்டார் எழுதிய பணத்தை, மொய்ப் பண ஏட்டுடன் வெற்றிலை பாக்கு, மலர் எலுமிச்சம் பழம் உள்ள தாம்பாளத்தில் வைத்து, மாப்பிள்ளை, பெரியவர்கள், மாமக்காரர்கள் ஆகியோரிடம் கொடுத்து வணங்கி வாங்கிப் பின்னர், இளையவன் ஒருவன் மாப்பிளையை வணங்க, இருவரும் சேர்ந்து அந்த மொய்ப்பண முடிச்சு உள்ள தாம்பளத்தை நடு வீட்டிற்குள் வைத்துப் பிறகு எடுத்துக்கொண்டு வந்து கணக்கில் வரவு வைத்துக் கொள்ள வேண்டும்.

இதே போல் பெண் வீட்டார்கள் எழுதிய மொய்ப்பண ஏட்டையும் தாம்பாளத்தில் வைத்துப் பெண்ணின் தகப்பனார் அல்லது பெண்ணின் அண்ணன், தம்பி, மாமக்காரர்களிடம் கொடுத்து, வாங்கி தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் வைத்துப் பிறகு எடுத்து வந்து, கணக்கில் வரவு வைத்துக் கொள்ள வேண்டும்.

**கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல் :**

மணவறை முடிந்து நெற்கோட்டை தாண்டி வீட்டிற்குள் சென்று வந்ததும், நடுவாசலில் மணமக்கள் வந்து, ஆளுக்கொரு நாற்காலியில் அமர வேண்டும், மாப்பிள்ளை, பெண் இரு வீட்டுப் பெற்றவர்களும், பெரியோர்களும் ஒவ்வொருவராக அவர்கள் முன்வந்து வந்து நின்றவுடன் மாப்பிள்ளை பெண் இருவரும் கீழே விழுந்து வணங்கி வாழ்த்துப் பெறுதலே இந்நிகழ்ச்சி.

**சீராடுக் கொடுத்தல் :**

மணமகளுக்கு அவர் தகப்பனாரும் அவருடைய சகோதரர்களும் தருகின்ற பணம்தான் சீராட்டு. மணமகளை மணையில் உட்காரச் செய்து வள்ளுவப்பையில் (பாக்கு, மஞ்சள், எழுத்தாணி முதலியன வள்ளுவப் பையில் இருக்கும்) ஒவ்வொரு பெயராக படிக்க, மணமகளின் தந்தை ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு பிடிபாக்கு போடுவார்கள். இப்படி பிடிபாக்கு வள்ளுவப்பையில் போட்டதும் அதை கட்டி முடிந்து, தாம்பளத்தில் வைத்துப் பெரியவர்களிடம் கொடுத்து மணமகன் வாங்கி பெற்றுக் கொள்வார். கடைசியாக மணமகனை விட இளையவர் ஒருவர் மணமகனை வணங்க இருவரும் அதை கொண்டுபோய் நடுவீட்டில் வைத்துவிட்டு வருவார்கள்.

கடைசியாக கணக்குப் பார்த்து சீராட்டுப் பணம் ஸ்ரீ தனத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும். இந்நிகழ்ச்சி மேலவட்டகையில் (வலையபட்டி பகுதியில் நடைபெறுவதில்லை)

**மஞ்சள் நீராட்டுதல் :**

மணமக்கள் இருவரும் நல்ல உடைகளைக் களைந்து விட்டு வேறு சாதாரண உடைகள் அணிந்து கொண்டு அணிந்து கொண்டு நடு வாசலில் ஒரு பெஞ்சின் மீது அமர வேண்டும். உள்ளூர் கோயில் வயிராவி மாப்பிள்ளைக்கு எண்ணை தொட்டு வைப்பார். பிறகு வயிராவி, கரைத்து வைத்திருக்கும் மஞ்சள் நீரை மாப்பிள்ளை, பெண் பாதங்களில் ஊற்றுவார். அப்போது மணமக்கள் தந்தையார் இருவரும் தங்களது ஆடை நுனிகளை மஞ்சள் நீரில் நனைத்துக் கொள்ளல் வேண்டும். இதுபோல் தாயார் இருவரும் மஞ்சள் நீரில் சேலை நுனிகளை நனைத்துக் கொள்ளல் வேண்டும். பிறகு மணமக்கள் நாணாலைக் குரிய புதிய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு மணமகள் விட்டுப் பெரியவர்கள் நீராலாத்தி எடுப்பார்கள்.

**நீராலாத்தி :**

ஒரு சிறிய தாம்பாளத்தில் கொஞ்சம் தண்ணீர்விட்டு அதில் மஞ்சள் தூளையும் சுண்ணாம்பையும் கலந்து வெத்திலையை கிள்ளிப் போட்டிருப்பார்கள். இது செந்தூர் நிறத்தில் இருக்கும். இதுவே நீராலத்தியாகும்.

**காப்புக் கழற்றிக் கால் மோதிரம் அணிதல் (நாணாளைச் சடங்கு) :**

பெண்ணை மணை மேல் நிற்க வைத்து மாப்பிள்ளையின் தாயார் பெண்ணுக்குத் தன் கையில் அணிந்துள்ள காப்பைக் கழற்றி அணிவித்து, பெண்ணின் (இரண்டாவது) கால் விரல்களின் மிஞ்சி (கால்மோதிரம்) அணிவிக்க வேண்டும். பிறகு திருப்பூட்டிய பிறகு செய்து கொள்ளும் சடங்கைப் போல் மாப்பிள்ளையின் தாயார் சடங்கு செய்து கொள்ள வேண்டும்.

**அரசாணிக்குப் பொங்கல் இடுதல் :**

பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக்காலுக்கு முன் பொங்கல் இட்டு இறக்கவேண்டியது. பிறகு அதை வண்ணாத்தியிடம் கொடுக்க வேண்டும்.



**அரசாணிக்கால் அவிழ்த்தல் :**

பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக் காலுக்கு முன் பொங்கல் இட்டு இறக்கியதும், பெண் வீட்டுப் பங்காளிகள் அல்லது பெண்ணின் சகோதரர்களே சர விளக்கை மலை ஏற்றிவிட்டு சரவிளக்கை எடுத்து வைத்துவிட்டு அரசாணிக் காலில் உள்ள அரச இலை, மா இலை, கிளுவைக் கம்பு உள்பட யாவற்றையும் அவிழ்த்துவிட வேண்டியது. பின் பங்காளி வீட்டுப் பையன்களில் ஒருவரை அழைத்து முளைப்பாரியை சர்வச் சட்டியில் வைத்து சிகப்புத் தோம்புத் துணி கொண்டு மூடி, ஊரணியில் அல்லது கிணற்றில் சங்கு ஊதிக் கொண்டுபோய் விட்டுவரவேண்டியது. கிளுவை பாலை கம்புகளை வீட்டுத் தோட்டத்தில் ஊன்றி வைக்க வேண்டியது.

**காப்பு அவிழ்த்தல் :**

மாப்பிள்ளை பெண் இருவருக்கும் அவரவர் மாமக்காரர்கள், இருவர் கையிலுள்ள ஐயரால் முடியப்பட்ட காப்பு இரண்டையும், தனித் தனியாக அந்தந்த மாமக்காரர் அவிழ்த்து ஒரு தாம்பளத்தில் வைத்து விட வேண்டும்.

**சோறு போடுதல் :**

இந்நிகழ்ச்சி காப்பு அவிழ்த்தலுக்கு பிறகு நடைபெறும். சாதம், முட்டை, கத்திரிக்காய், பருப்பு, நெய் வைத்து மணமகன் மணமகளுக்கு நடுவீட்டில் சோறு போடுவதே இந்நிகழ்ச்சியாகும்.

**பிள்ளை எடுக்கிக் கொடுத்தல் :**

சடங்குக் குழவியை சிகப்புத் துணியில் வைத்து அதைக் குழந்தையாகவே கருதி பெண்ணின் தந்தை எடுக்கிக் கொடுக்க, பெண் நமஸ்காரம் செய்து வாங்கிக் கொள்வதுதான் இச்சடங்கு. இதுபோல் பெண் வீட்டு ஆண்களில் முக்கியமானவர்கள் எல்லோரும் பிள்ளை எடுக்கிக் கொடுத்து ஆசீர்வாதம் செய்ய வேண்டும்.

**பெண் சொல்லிக் கொள்வது :**

பெண் தாய் வீட்டிலிருந்து கணவன் வீட்டுக்குச் செல்ல இருப்பதால் தன் தாயிடமும் தாயதிகளிடமும் சொல்லிக் கொள்ள வேண்டும். பெண் நடு வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பத்தியில் விரித்திருக்கும் பாய் ஒன்றில் கிழக்கு

முகமாக கையில் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்துடன் நிற்க வேண்டும். பெண்ணின் பெற்றோர், உறவினர், பங்காளிகள் ஒவ்வொருவராக அந்தப் பாயின் மீது எதிரில் நிற்க, அவர்களிடம் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தைக் கொடுத்து, அவர்கள் காலில் விழுந்து வணங்கி, சென்று வருகிறேன் என்று சொல்லி வாங்கிக் கொள்ள வேண்டும்.

**குடி அழைப்பு :**

பெண் சொல்லிக் கொண்டதும் மணமக்கள் இருவரும் நடு வீட்டில் உட்கார்ந்து இருந்து எழுந்து வந்து முகப்பு நடுப் பத்தியில் கோலத்திற்கு முன் வந்து நிற்பார்கள். பெண்ணுக்கு ஆயாள் வந்து சிலேட் விளக்கு வைத்து, அழகு ஆரத்தி எடுத்து, விபூதி பூசி கட்டுச் சோறுடன் வழியனுப்பி வைப்பார்கள். மாப்பிள்ளைக்கு வலது பக்கம் நிற்கும்படியாக பெண் அழைத்துச் செல்ல வேண்டியது. இது சமயம் பெண்ணின் தாயார் பால் பானையை கையில் கொண்டு வரவேண்டும்.

மாப்பிள்ளையின் ஊருக்குச் செல்லும் வழியில் ஒரு ஊரணிக் கரையில் இறங்கி, கட்டுச் சோறு சாப்பிட்டுவிட்டு மாப்பிள்ளை வீட்டுப்பங்காளி ஒருவரது வீட்டில் தங்கி இருக்கவேண்டும். தற்பொழுது மாப்பிள்ளையின் ஊரில் கோவிலிலோ அல்லது பொது இடத்திலோ இருக்கிறார்கள்.

## திருமணத்தன்று<br>மாப்பிள்ளை வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள்

**மாப்பிள்ளை வீட்டில் பெண்ணழைப்பு :**

பெண் வீட்டிலிருந்து திருமணம் முடிந்து விடைபெற்று வந்த மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள், மாப்பிள்ளை வீட்டு வளவு வாசலில் கோலமிட்டு பெண்ணழைத்த பொங்கல் இட்டு, அடுப்பை அகற்றிவிடலாம். பெண்ணை அழைத்து வரும் சமயம் மூன்று இலையில் (வலையபட்டி பகுதியில் நான்கு இல்லையில்) சாதம் படைத்து, ஒரு இலைக்கு 4 வாழைப்பழம், பருப்பு, நெய் ஊற்றிப் படையல் செய்துபடைத்த இலைகளுக்கு முன் மூன்று தவலைகளில் தண்ணீர் வைத்து ஒன்றில் குலம் வாழும் பிள்ளையும், மற்றொன்றில் எழுத்தாணியையும் போட வேண்டும். பெண் மாப்பிள்ளை இருவரும் திருமணம்



முடிந்து வந்து தங்கி இருக்கும் இடத்திலிருந்து, எல்லோரும் மேள வாத்தியங்களுடன் மணமக்களை ஊர்வலமாக மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வரவேண்டும். வீட்டிற்குள் நுழையும் பொழுது முதலில் வலது காலை எடுத்து வைத்து நுழையும்படி முன்னதாகவே சொல்லிவைத்து அதன்படி மணமக்கள் செய்தல் வேண்டும்.

பெண்ணும், மாப்பிள்ளையும் வீட்டிற்கு வந்ததும் முகப்பு நடுப்பத்தியில் கோலத்துக்கு முன்பாக நிறுத்தி மாப்பிள்ளையின் அப்பத்தாள் அழகு ஆரத்தியும், பிள்ளையார் ஆரத்தியும் எடுத்து, விபூதி பூசி உள்ளே வந்ததும் படைத்த இலைக்கு முன்பாக கிழக்கு முகமாக நிற்கும்படி இரு தடுக்கைப் போட்டு ஒன்றில் சடங்கு செய்து கொள்பவர்களும், மற்றொன்றில் பெண்ணும் நிற்க வேண்டும். இவர்களுக்கு அருகில் மாப்பிள்ளை நிற்கவேண்டும்.

குறிப்பாக பெண் ஆனவள், பெண்ணழைத்துக் கொண்டு உள்ளே வரும் பொழுது எந்தத் திசையை நோக்கி உள்ளே வருகிறாளோ அத்திசையைப் பார்த்தவாரே முதல் சடங்கு செய்துகொள்ள வேண்டும். அப்போது திருப்பூட்டுச் சடங்கில் செய்த மாதிரி யாவற்றையும் செய்ய வேண்டும். அதுமுடிந்ததும் மற்ற மூன்று திசைகளிலும் சடங்கு செய்து கொள்ளச் சொல்ல வேண்டும். முதல் சடங்கைத் தவிர அடுத்து, அடுத்து உள்ள சடங்குகள், சிலேட்டு விளக்கை இடதுகையிலும், கெண்டிச் செம்பை வலது கையிலும் வைத்துச் செய்து கொண்டால் போதும். எல்லாச் சடங்கிலும் பெண் கையில் 2 வெற்றிலை இருக்க வேண்டும். நான்கு திசையிலும் சடங்கு செய்து வந்தால் ஒரு சுற்று முடிந்துவிடும். பின்னர் இரண்டாவது சுற்றை சும்மா வரவேண்டும். மூன்று சுற்றுக்கும் இரண்டு மாமக்காரர்களும் உடன் நிற்க வேண்டும். மூன்றாவது சுற்று வரும்போது, ஒன்றன் பின் ஒன்றாக மணமக்கள் இருவரும் இணைந்து மூன்று தவலைகளுக்குள்ளும் கையை விட்டுப் பார்த்து, குலம் வாழும் பிள்ளையை மாப்பிள்ளை எடுத்துப் பெண்ணின் கையில் கொடுத்து விட்டு, எழுத்தாணியைத் தன் கையில் வைத்துக் கொள்ளவேண்டும். அந்தக் குலம் வாழும் பிள்ளையைப் பெண் பத்திரமாக இடுப்பில் சொருகிக் கொண்டு நடு வீட்டில் போய் இருவரும் உட்கார்ந்து வெளியே வரவேண்டும்.

**மாப்பிள்ளை பெண் பால், பழம் சாப்பிடுவது :**

பெண் அழைத்து முடிந்தவுடன், வளவில் உள்ள மற்றவர்கள் பால் பழம் தருவார்கள். அத்துடன் பாக்கு பணம் ரூபாய் 1 அல்லது 2 வைப்பார்கள். அதை முதலில் மாப்பிள்ளை சாப்பிட்டு விட்டுப் பணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் பெண் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பெண் வீட்டார் எடுக்கும் பச்சரிசி வேவு :**

மாப்பிள்ளை பெண், பால், பழம் சாப்பிட்டதும் மாப்பிள்ளை வீட்டில் பெண் வீட்டார் எடுக்க வேண்டிய வேவு இது. வேவுக் கடகத்தில் பச்சரிசி பெ.படி 1, தேங்காய் 2, கத்திரிக்காய் 2, போட்டு இருக்க வேண்டும். பெண் வீட்டைச் சேர்ந்த ஆண்கள் தலையில் இந்த வேவை வைத்து மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த பெண்கள் இறக்குதல் வேண்டும். குறிப்பாக பெண்ணின் தகப்பனார் தலையில் இருந்து பெண் வேவு இறக்க வேண்டும்.

**மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் நெல் வேவு :**

வேவுக் கடகத்தில் நெல் பெ. படி 1, தேங்காய் 2, கத்திரிக்காய் 2 வைத்து மாப்பிள்ளையின் தகப்பனார் தலைப்பாகை கட்டி நெல் கடகத்தைத் தலையில் வைத்திருக்க வேண்டும். இந்த வேவைப் பெண் வந்து இறக்குதல் வேண்டும். இந் நிகழ்ச்சி இப்பொழுது நடைபெறுவதில்லை.

**ஸ்ரீ தன உண்டியல் :**

ஸ்ரீ தனம், தலைச் சீலையில் முடிந்தது பாக்குச் சுருளில் வைத்தது ஈடு பொன் தந்தது ஆகிய நான்கு தொகைகளையும் குறிப்பிட்டு உண்டியல் எழுதி உடனே செல் வைத்து அந்த உண்டியலையும் அதற்குண்டான ரொக்கம் அல்லது டிராப்டையும் ஒரு தாம்பளத்தில் வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம் பழம், புஷ்பம் வைத்து மணமக்களின் தந்தையார், பெரியவர்கள், மாமக்காரர் முதலியவர்களிடம் மாப்பிள்ளை கொடுத்து வணங்கிப் பெற்றுக் கொண்டு, முடிவில் ஒரு சிறு பையனும் மாப்பிள்ளையுமாகச் சேர்ந்து அத்தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் கொண்டு போய் வைத்து எடுத்து வர வேண்டும்.

பின்னர் பெண் வீட்டார் பாக்கு வெற்றிலை வாங்கிச் சொல்லிக் கொண்டு புறப்பட வேண்டியது.



**சீர்முறைக் கணக்கு பார்த்து கொள்ளுதல் :**

நாளது தேதியில் திருமணத்தின் போது

| | |
|---|---|
| ஸ்ரீதனமாகக் கொடுத்தது | ரூ. |
| தலைச் சீலையில் முடிந்தது | ரூ. |
| ஈடுபொன் வாங்கியது | ரூ. |

(குறிப்பு : ஈடு பொன் தொகை மாப்பிள்ளை வீட்டார் கொடுத்து ஸ்ரீதனத்துடன் அதை சேர்த்துக் கொள்ள வேண்டும் இக்காலத்தில் உண்டியல் எழுதி செல் வைக்காமல் மேலே கண்டுள்ளபடி எழுதிக் கொள்கின்றனர்.)

**பழந்தேங்காய் கொடுத்தல் :**

இந்நிகழ்ச்சி சீர் முறை கணக்கு பார்த்தலுக்குப் பின் நடைபெறும். பெண் வீட்டிலிருந்து கொண்டு வந்த பழம் தேங்காயுடன் ரூபாய் வைத்து பெண்ணின் பெற்றோர்கள் பெண்ணை ஆசிர்வதித்து கொடுப்பார்கள். பிறகு பெண் அதை பெரியவர்களிடம் கொடுத்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.இந்நிகழ்ச்சி மேல வட்டகையில் நடைபெறுகிறது. இதன் பிறகு பெண் வீட்டார் எடுக்கும் வேவு நடைபெறும்.

**நீர்ச் சோறு இடுவது :**

திருமணம் முடிந்த அன்று இரவோ அல்லது மறு நாளிலோ, பெண் வீட்டார், மாப்பிள்ளை பெண்ணைக் கூட்டிக் கொண்டு சென்று மாப்பிள்ளைக்கு கஞ்சி, பணியாரம், வள்ளிக்கிழங்கு பொரித்து உள் வீட்டில் இலை போட்டு பெண் பரிமாறி தயிர் ஊற்ற வேண்டியது. அப்போதே நடு வீட்டினுள் பெண்ணை உட்கார வைத்துப் பெண்ணின் அத்தை, பெண்ணின் கழுத்தில் தும்பைக் கட்டி விட வேண்டியது. அத்தை அல்லது அத்தை மகள் அல்லது அப்பச்சி, பெரியப்பச்சி வகையறாவும் தும்பைக் கட்டலாம்.

**மூன்று வேவு அல்லது வழிகள் :**

திருமணம் முடிந்தவுடன் மூன்று முறை பெண் வீட்டார். மாப்பிள்ளை பெண்ணைத் தன் வீட்டிற்குக் கூட்டி வரவேணும். அதில் நீர்ச் சோறு இடுவது முதல் வழியாகவும் மற்ற இரண்டு வழிகளுக்கும் ஒரே தடவையில் வந்து வரலாம். இந்த முறையுடன் திருமண முறைகள் யாவும் பூர்த்தியடைகிறது. செட்டி நாட்டுக் கல்யாணம் சீரும் சிறப்புடன் நிறைவேறுகிறது.

**காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல் :**

ஒரு குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நிறைவு பெற்றதை முன்னிட்டு இரு குடும்பத்தாரையும் பாராட்டி, அவர்களுடைய உறவினர்கள் (தாய்வழி மாமன்) கொடுக்கின்ற விருந்து இது. புது மணமக்கள் தாய்மாமன் வீடுகளுக்குச் சென்று காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல் என்பது தொன்று தொட்டு நிலவி வருகிறது.

**கழுத்துரு கோர்த்தல் :**

கழுத்துரு கோர்ப்பதற்கு 10 நிர் வெள்ளை நூல் கண்டு வாங்க வேண்டும். இரு பெரியவர்கள் அந்த நூலில் 21 பாகம் (9 மீட்டர்) எடுத்து (ஒரு பாகம் 45செ.மீ.) அதை முப்பிரியாக வரும்படி ஒரு மடிப்புக்குள் இன்னொரு மடிப்பை பின்னலாகக் கொடுத்து வாங்கி, சங்கிலிப்பின்னல் போல பின்னி நன்றாக இறுக்கமாகத் திரித்துக் கொண்டு பட்டணம் மஞ்சளை நீரில் நனைத்துக் கொண்டு அந்த நூலில் நன்றாக தேய்த்து மஞ்சள் நன்றாக ஏறும்படி செய்து முறுக்கு விடாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிக் கிடைப்பது 7 பாகமாக இருக்கும். அதை இரண்டாக மடித்துக் கழுத்துருவில் 31 (சில ஊர்களில் 29) உருப்படிகளையும் கோர்க்கவேண்டும்.


மேல்பாகம், கீழ்பாகம் இரண்டிலும் கோர்த்தபின் இரண்டையும் இரு முனைகளிலும் தனித்தனியே உருவிவராத நிலையில் நன்றாக முடிச்சு போடவேண்டும்.

**பிள்ளைச் சரடு இழைத்தல் :**

7 பாகம் நூல் எடுத்து, 3ல் ஒரு பங்காக சங்கிலிப் பின்னல் பின்னி மஞ்சள் ஏற்றி, அதில் ஒத்தை தும்பை கோர்க்க வேண்டும். ஒரு நல்ல நாள் பார்த்து பெண்ணின் தாயார் வீடு சென்று கழுத்துருவின் இடது பக்கத்தில் இரண்டு கயிற்றிலும் சேர்த்து குச்சி, தும்பு துவாளையைக் கட்டி பின்னர் கழுத்துருவை கழுத்தில் அணிந்து கொண்டு சாமி கும்பிட்டு பின்னர் கழட்டி வைக்க வேண்டும்.



## கழுத்துரு





**கழுத்துரு உருப்படிகள்**

மேல் பாகம் : 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16
கீழ்பாகம் : 17, 18, 19, 20, 21, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31
கடைமணி : 1, 16, 17, 31
உரு : 2, 3, 4, 6, 8, 10, 12, 14, 15, 18, 19, 20, 22, 23, 25, 26, 28, 29, 30
ஏத்தனம் : 5, 13, 21, 27
லெட்சுமி ஏத்தனம் : 24
சரி மணி : 7, 11
திருமாங்கல்யம் : 9
29 உருப்படிகள் இருந்தால் 23, 25 (வட்டத்துக்குள் உள்ளதை) கோர்க்க வேண்டாம்.

**சங்கிலிப்பின்னல்**

**இசைவு பிடிமானம் பூர்த்தி செய்யும் விதம்**



உ

சிவமயம்

..................................................வருஷம்..................................மாதம்............................ம் தேதி

கல்வாசனாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் ஒக்கூருடையார் ஆ.தெக்கூர் கருப்பன் செட்டி துர்க்கை கருப்பரோ, கேரளசிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில் அரும்பாக்கூருடையார் ஆ.தெக்கூர் அருணாசலம் செட்டி லெட்சுமணரோ அவர் மகன் ராமனாதனை இவர் மகள் சேதுக்கரசியை

(மணமகள் வீட்டில் முதலில் அவர்கள் கோவில், அய்யா, அப்பச்சியின் பெயரை முதலில் எழுதி பிறகு மணமகன் வீட்டுக் கோவில், அய்யா அப்பச்சி பெயர்களை எழுத வேண்டும்)

---

## பெண்வீட்டார் திருமணத்திற்கு முன் கூட்டியே தயாரித்து வைக்கவேண்டிய சாமான்கள்

1. விரலி மஞ்சள்
2. மஞ்சள் தூள்
3. சந்தனம்
4. நிலை விளக்கு
5. அரசாணி மேடை
6. அரசாணி அடுப்பு
7. அரசாணிக்கால் கட்டமூங்கில் கம்பு
8. பாலைக் குச்சி
9. கிளுவைக் கம்பு
10. பவளம் அல்லது சிவப்பு
11. வெள்ளிக்காசு 25 பைசா
12. மாவிலை
13. அரச இலை
14. முளைப்பாரிக் கிண்ணம்–5
15. சிலேட்டு விளக்கு–1
16. பெரிய தாம்பாளம்
17. முக்காலி–2
18. சருவச் சட்டி–2
19. செம்பு
20. கெண்டிச் செம்பு
21. சடங்குத்தட்டு
22. படி
23. சடங்குத் தட்டு 7 கிண்ணங்களுடன்
24. குழவி பட்டுடன்
25. நவதானியம்
26. வேவுக்கடகம்–2
27. ஏட்டு ஓலை
28. பச்சரிசி
29. மாமப்பட்டு
30. சங்கு
31. ஆரத்தி பிளேட்
32. விபூதி பிளேட்
33. இசைவு பிடிமான ஏடு–1
34. மொய்ப் பண ஏடு–1
35. தடுக்கு–2
36. பர்மா பாய்–1
37. மணை
38. மணை விரிப்பு–1
39. காப்புக் கட்டும் சிவப்புத்துணி–2
40. சர விளக்கு
41. செங்கல்–5
42. பச்சை நெல் உமி
43. கொச்சைக் கயிறு முடி–5
44. தேங்காய்
45. வாழைப்பழம்
46. கத்திரிக்காய்
47. கோலக்கூட்டு
48. மலர் மாலை
49. அரசஞ்சமித்து
50. ஆட்டுப் புழுக்கை



## திருமணத்திற்கு மாப்பிள்ளை வீட்டார் முன்கூட்டியே தயாரித்து வைக்க வேண்டிய சாமான்கள்

1. விரலி மஞ்சள்
2. மஞ்சள் தூள்
3. சந்தனம்
4. குங்குமம்
5. கற்கண்டு
6. பட்டணம் மஞ்சள்
7. நிலை விளக்கு
8. சிலேட் விக்கு
9. பெரிய தாம்பாளம்
10. சட்டி, செம்பு
11. கெண்டிச் செம்பு
12. சடங்குத் தட்டு செட்
13. படி
14. குழவி பட்டுடன்
15. கத்திரிக்காய்
16. முளைப்பாரி நெல் பெ. படி–1
17. நவதானியம்
18. வேவுக் கடகம்–2
19. ஏட்டு ஓலை
20. மாமப்பட்டு
21. சங்கு
22. ஆரத்தி பிளேட்
23. விபூதி பிளேட்
24. கோட்டை கட்ட நெல் பெ.படி–2
25. வைக்கோல்
26. துணிப்பை–1
27. வள்ளுவப் பை
28. குலம் வாழும் பிள்ளை
29. பாக்குச் சுருள்
30. இசைவு பிடிமான ஏடு–1
31. மொய்ப் பண ஏடு–1
32. தடுக்கு–2
33. பர்மா பாய்
34. கோலக்கூட்டு
35. டர்பன் (தலைப் பாகை)
36. சால்வை
37. டாலர்
38. எழுத்தாணி
39. கண்மார்க் நூல் கண்டு–1
40. திருப்பூட்டுகிற மாலை–2

*************

## பூரம் கழிக்கத் தேவையான சாமான்கள் (பெண் வீட்டில்)

அரைத்த மஞ்சள்
சந்தனம், புஷ்பம்
நெல்படி–1
பச்சரிபடி–1
உப்பு படி–1
இலை அடுக்கு–1
கத்திரிக்காய்–5
தேங்காய் –3
வாழைப்பழம் –6
வெத்திலை பாக்கு
பால்
செம்பு, முக்காலி
சருவச்சட்டி, சத்தகம்
மாவிலை, வேப்பிலை

******

## காப்புக் கட்டுச் சாமான்கள்

அரைத்த மஞ்சள்
முனைமுறியாத விரளி மஞ்சள்
நூல் கண்டு
கரைத் துணி
மாமப் பணம் ரூ.2
தேங்காய் –3
வாழைப்பழம்–10
இலை அடுக்கு–1
வெற்றிலை பாக்கு
சந்தனம்
கதம்ப புஷ்பம்
மாங்கொத்து
நெல்படி–1
பச்சரிசி படி–1
பால் அரை உழக்கு
நெய் அரை உழக்கு
மணல்
உமி
சமித்து
சூடம்
முக்காலி–2
சருவச்சட்டி–2
தாம்பாளம்–2
முளைப்பாரிக் கிண்ணம்–5
முளை திரவியம்
சிகப்பு பட்டு –1
செம்பில் தண்ணீர்

மாப்பிள்ளை வீட்டில் திருமாங்கல்யம் கோர்த்து வைக்க வேண்டும்.
(காப்புக் கட்டுச் சாமான்கள் மாப்பிள்ளை பெண் இருவருக்கும் காப்புக்கட்டுவதற்கு இதுபோல் இரண்டு செட் பெண் வீட்டார் எடுத்து வைக்க வேண்டும்)

******



## மணவறை சாமான்கள் (பெண் வீட்டில்)

அரைத்த மஞ்சள்
தேங்காய்–3
வாழைப்பழம்–10
இலை அடுக்கு–1
வெற்றிலை பாக்கு
சந்தனம்
கதம்ப புஷ்பம்
நெல்படி–1
பச்சரிபடி–1
நூல் கண்டு–1
அரசஞ்சமித்து
பால் உழக்கு அரை
நெய் உழக்கு அரை
சூடம்
முளைத்திரவியம்
கிண்ணத்தில் நல்லெண்ணை
கொண்ட மாலை–2
சடங்குச்சாமான்
மாப்பிள்ளைக்கு சாப்பாடு
சிகப்புப்பட்டு–1
செம்பில் தண்ணீர்

******

## அரசாணிக்கால் கட்டுவதற்கு வேண்டிய சாமான்கள்

சிறுபவளம் அல்லது சிவப்பு
25 பைசா காசு–1
கிளுவைக் கம்பு–1
பாலைக் குச்சி–1
மா இலைக் கொத்து
அரச இலைக் கொத்து
அரசாணி மேடை
அரசாணி அடுப்பு
முளைப்பாரிக் கிண்ணம்–5
ஆட்டாம் புழுக்கை
சரவிளக்கு–1
கொச்சைக் கயிறு–3 முடி

*****

## திருப்பூட்டுத் தாம்பாளத்தில் எடுத்து வைக்க வேண்டிய சாமான் விவரம்

### மாப்பிள்ளை வீட்டில்

1. விரலி மஞ்சள்–2
2. எலுமிச்சம் பழம்–2
3. வெற்றிலை, பாக்கு
4. மல்லிகைப் பூ முழம்–2
5. விபூதி சிறு பிளாஸ்டிக் டப்பாவில்
6. குங்குமம் சிறு பிளாஸ்டிக் டப்பாவில்
7. வெற்றிலையில் அரைத்த மஞ்சள்
8. சந்தனம் சிறு பிளாஸ்டிக் டப்பாவில்
9. கழுத்துரு திருமாங்கல்யம்
10. பெரிய தாலி சோடிப்பு
11. சிறு தாலி சோடிப்பு
12. கோவில் மாலை
13. திருப்பூட்டு பெரிய யானைக் கண்மாலை
14. பெண்ணிற்கு கொடுக்கும் திருப்பூட்டு சேலை
15. மேற்படிக்கான பிளவ்ஸ்
16. குலதேவதையின் விபூதி பிரசாதம்
17. மிட்டாய்–2

### பெண் வீட்டில்

1. விரலி மஞ்சள்–2
2. வெற்றிலை பாக்கு
3. எலுமிச்சம் பழம்–1
4. விபூதி
5. குங்குமம்
6. சந்தனம்
7. பெரிய பூமாலை
8. கெண்டை வேஷ்டி துண்டு
9. தங்க மைனர் செயின்
10. மோதிரம்
11. கைக்கெடிகாரம்
12. பூச்செண்டு

*******

**இரு வீட்டாரும் சர்வச்சட்டியில் எடுத்து வைக்க வேண்டியவைகள்**

1. மட்டை உரித்தமஞ்சள்தடவிய தேங்காய்–2
2. வெற்றிலை, பாக்கு
3. விரலி மஞ்சள்–2
4. வெள்ளி சர்வர் சட்டி

****



உ

சிவமயம்

## திருமண நடைமுறைச் சடங்குகளின் சுருக்கம்

**பெண் வீட்டார் செய்பவை**

1. கல்யாணம் பேசி முறைச் சிட்டை எழுதிக்கொள்ளல்
2. நிச்சயதார்த்தம்
3. முகூர்த்தத்திற்கு நாள்குறித்தல்
4. முகூர்த்தக்கால் ஊன்றுதல்
5. சுவாமிகளுக்கு பணம் முடித்தல்
6. கல்யாணம் செல்லுதல்
7. திருமணக் கொட்டகை அலங்கரித்தல்
8. கோவிலுக்குப் பாக்கு வைத்தல் (பங்காளி)

**கல்யாணத்திற்கு முதல் நாள்**

9. கூடி ஆக்கி உண்ணுதல்
10. நடுவீட்டில் விளக்கு ஏற்றுதல்
11. கொழுமேளம் வாசிக்கச் செய்தல்
12. மணை போடுதல்
13. கோவில் மாலைகளை வாங்குதல்
14. வளவு வீட்டில் தும்பு பிடித்துக் கோலமிடுதல்
15. முகப்பு வளவுபத்தியில் கோலமிடுதல்
16. அரசாணைக்கால் கட்டுகிற இடத்தில் கோலமிடுதல்
17. மாற்றுக்கட்டுதல்
18. அரசாணைக் கால் கட்டுதல்
19. பங்காளியைக்கொண்டு இசைவு பிடிமானம், மொய் பணம் ஏடு தயாரித்தல்
20. கழுத்துரு வாங்கவருகிறவர்களுக்கு தயாராக இருத்தல் (மாப்பிள்ளை வீட்டார்)
21. மாப்பிள்ளை அழைப்புக்குரிய பொருள்களைத் தாம்பளத்தில் எடுத்து வைத்தல்
22. சர்வச்சட்டியில் தேங்காய், வெற்றிலை, பாக்கு
23. சிலேட்விளக்குக் மெழுகு திரி போட்டு வைத்தல்
24. சரவிளக்கு ரெடி செய்தல்
25. பூரம்கழித்தல்,காப்புக்கட்டுதல், பகவத்யாணம், மணவறைச் சடங்குகளுக்குரிய பொருள்களை எடுத்து வைத்தல்.

**கல்யாணத் தன்று**

26. பெண்ணுக்குப்பூரம்கழித்தல்
27. கழுத்துருவுக்குப் பொன்கொடுத்தல்
28. மாப்பிள்ளை அழைக்கும் இடத்திற்கு வேண்டியதைச் செய்தல்
29. மாப்பிள்ளை சுவாமி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்தல்
30. மாப்பிள்ளைக்கும் கூட இருப்பவர்களுக்கும் பலகாரம் அனுப்புதல்
31. மாப்பிள்ளை அழைப்பு
32. (உள்ளூராக இருந்தால்) மாப்பிள்ளை அறிதல்
33. முகப்புப் பத்தியில் விளக்கு வைத்து ஆரத்தி எடுத்தல்
34. பெண்ணுக்கு பகவத்யானம் காப்புக் கட்டுதல் (மாமக்காரர்)
35. மாப்பிள்ளைக்கு பகவத்யானம் காப்புக் கட்டுதல்(மாமக்காரர்)
36. திருப்பூட்டுத் தாம்பாளத்தை வைத்து மாங்கல்ய பூஜை செய்து உள் வீட்டில் வைத்தல்
37. திருப்பூட்டுத் தாம்பளத்தைப் பெண்ணின் மாமக்காரர் எடுத்து வந்து வந்திருப்பவர்களிடம் ஆசீர்வாதம் வாங்குதல்
38. திருப்பூட்டுதல்
39. வந்திருப்போருக்கு மிட்டாய், ரொட்டி வழங்குதல்
40. மாமக்காரர் இருவரும் பெண், மாப்பிள்ளையை முகப்பு வரைக் கூட்டி போய் எல்லோருடைய ஆசீர்வாதமும் பெறுதல்
41. இசைவுப் பிடிமானம் எழுதல்
42. திருப்பூட்டுச் சடங்கு (மணமகனுக்கு : தாய், சகோதரி)
43. மணவறை
44. வேவு எடுத்தல்
45. பணம் எழுதுதல்
46. கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்
47. சீராட்டுக் கொடுத்தல்
48. மஞ்சள் நீராட்டல்
49. காப்புக் கழற்றிக் கால் மோதிரம் இடுதல் – நாணா வகைச் சடங்கு
50. காப்பு அவிழ்த்தல்
51. பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்
52. அரசாணைக் காலுக்குப் பொங்கல் இடுதல்
53. பெண் சொல்லிக் கொள்ளுதல்
54. கட்டுச் சோறு கட்டிக் கொடுத்தல்
55. குடி அழைப்பு



56. அரசாணைக்கால் அவிழ்த்தல்
57. மாப்பிள்ளை வீட்டில் வேவு எடுத்தல்
58. மாப்பிள்ளை வீட்டில் ஸ்ரீ தன உண்டியல் எழுதிக் கொடுத்தல்
59. மாப்பிள்ளை பெண்ணுக்குக் காய்ச்சி ஊற்றுதல் (ஆயா வீடு)

**மாப்பிள்ளை வீட்டார் செய்பவை**

1. கல்யாணம் பேசி முறைச் சிட்டைகள் எழுதிக் கொண்டு நிச்சயதார்த்தம் முகூர்த்தத்திற்கு நாள் நிச்சயித்தல்
2. முகூர்த்தக்கால் ஊன்றுதல்
3. சுவாமிகளுக்குப் பணம் முடிதல்
4. கல்யாணம் சொல்லுதல்
5. கோவிலுக்கு பாக்கு வைத்தல்
6. கூடி ஆக்கி உண்ணுதல்
7. நடு வீட்டில் விளக்கு ஏற்றுதல்
8. கொழு மேளம் வாசித்தல்
9. வளவு வீட்டில் தும்பு பிடித்துக் கோலமிடல்
10. முகப்பு வளவு பத்தியில் கோலமிடல்
11. பெண் அழைப்புக்கு வாசலில் கோலமிடல்
12. மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல்
13. பங்காளியைக் கொண்டு இசைவுப் பிடிமானம் மொய்ப் பண ஏடு தயாரித்தல்
14. பெண் வீட்டிற்குப் போய் கழுத்துரு, சிறு தாலி, ஜோடிப்புகள் வாங்கி வருதலும், சேலை பரப்புதலும்
15. கழுத்துரு கோர்த்தல்
16. முளைப் பாலிகை தயார் செய்தல்
17. கோட்டை நெல் கட்டுதல்
18. வள்ளுவப் பை தயாரித்தல்
19. நடு வீட்டுப் பத்தியில் அரிசி அளத்தல்
20. சர்வச் சட்டியில் தேங்காய், வெற்றிலை, பாக்கு
21. திருப்பூட்டுவதற்குக் கொண்டு செல்ல வேண்டிய தாம்பாளம் தயார் செய்தல்
22. கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தனுப்புதல்

**கல்யாணத்தன்று**

23. மாப்பிள்ளை தன் வீட்டிலிருந்து புறப்படுதல்
4. பெண் வீட்டார் மாப்பிள்ளை அழைக்க வரும் இடத்திற்கு வந்ததும் கோவிலுக்குச் சென்று வழிபடுதல்
25. மாப்பிள்ளை அழைப்பு
26. பகவத்யானம், காப்புக் கட்டுதல், பூமணம் இடுதல்
27. திருப்பூட்டுதல்
28. இசைவுப் பிடிமானம் கையொப்பமிடல்
29. கல்யாண வேவு எடுத்தல்
30. பணம் எழுதுதல்
31. குடி அழைப்பு
32. பெண் அழைப்பு
33. வளவு முகப்பு பத்தியில் விளக்கு வைத்து ஆரத்தி
34. பெண் அழைப்புச் சடங்கு
35. வந்திருப்பவர்க்கு ரொட்டி, மிட்டாய் வழங்குதல்
36. மாப்பிள்ளை பெண், பால் பழம் சாப்பிடுதல்
37. பெண் வீட்டார் எடுக்கும் வேவு
38. மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் வேவு
39. ஸ்ரீ தன உண்டியல் எழுதி வாங்குதல்
40. பெண் வீட்டிற்கு 3 வழிகளுக்குப் போய் வருதல்
41. காய்ச்சி ஊற்றிக் கொடுத்தல்

*****



## ஐம்பது, அறுபது, எண்பது



இல்லறமான வண்டிக்குக் கணவன் ஒரு சக்கரம்; மனைவி இன்னொரு சக்கரம். ஒரு சக்கரத்திலே வண்டி ஓடாது. இரண்டு சக்கரங்களும் ஒருங்கே பொருத்தி ஓட வேண்டும். அப்போதுதான் பயணம் வெற்றிகரமாக முடிவடையும். இது வாழ்க்கைப் பயணத்துக்கும் பொருந்தும். இரண்டு சக்கரங்களும் ஓரே அளவில் ஓரே நிலையில் இருக்க வேண்டும் என்பதைப் போல, கணவன் மனைவி இரண்டு பேருமே ஒருமித்த மனநிலையில் வாழ்க்கை நடத்தினால்தான் அது பயனுள்ளதாக அமையும். இப்படி நடத்தப்பட்ட வாழ்க்கையை நாம் போற்றிக் கொண்டாடுகிறோம். நாம் காண்கிற பொருட்களில் பொன்னும் மணியும் உயர்ந்தவை. இப்பொன் நீ, இம்மணி நீ, இம் முத்து நீ என்று அப்பர் பெருமான் பாடினார். பொன்னே மணியே, பொருளே அருளே என்று அருணகிரியார் சுந்தரனுபூதியில் கூறுகிறார். பொன்னிலும் மணி உயர்ந்தது. மணியிலும் முத்து உயர்ந்தது. உலகிலும் ஐம்பதாம் ஆண்டில் பொன் விழாவும், அறுபதாம் ஆண்டில் மணிவிழாவும், எண்பதாம் ஆண்டில் முத்து விழாவும் கொண்டாடுகிறார்கள். பொன், மணி, முத்து மூன்றும் ஒன்றுக்கொன்று உயர்வு உடையவை. மனிதனும் ஐம்பத்தில் உயர்ந்து பொன்னாக வேண்டும். அறுபது மேலும் உயர்ந்து மணியாக வேண்டும். எண்பதில் பந்தத்தினின்று விடுபட்டு முத்தாக வேண்டும். இந்த நிலையை உணர்த்தவே இந்த விழாக்கள் கொண்டாடப் படுகின்றன.

– திருமுருக கிருபானந்த வாரியார்

# சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம், மகாபிஷேக விழாக்கள் நடைமுறை


மனிதர்கள் ஓராண்டு பூர்த்தியானதும் அப்த பூர்த்தியும், (நகரத்தார்கள் இதைப் புதுமை என்று கொண்டாடி வந்துள்ளனர்) 59வது வயதில் உக்ரரத சாந்தியும்60வது வயதில் சஷ்டியப்த பூர்த்தியும் 70வது வயதில் பீமரத சாந்தியும் 80வயது முடிந்து 8வது மாதத்தில் அதாவது 1000 பிறைகள் கண்டவுடன் சதாபிஷேக சகஸ்ர சந்திர தரிசன சாந்தியும் 100வது வயதில் மகாபிஷேகமும் விதிமுறைகளுடன் செய்து கொள்கிறார்கள்.

எல்லா மனிதர்களுக்கும் 60வது வயது முடிந்து 61 வது ஆண்டு தொடக்கத்திலிருந்து காலன், யவனன், யமனன், ஸிம்தூம்ரன் என்ற நான்கு வித துஷ்ட கிரஹங்களால் எந்தச் சமயத்திலும் அபமிருத்யு தோஷங்கள் வரக்கூடும் என்றும் அந்த தோஷ நிவர்த்திக்காக 60 வருஷத்திற்கும் 60 தேவதைகள் வைத்து பூசித்து மகா மிருத்தியுஞ்ஜய ஹோமமும் செய்து கொண்டால் 61வது வயதிலிருந்து 120 வயது வரை நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள் என்று வேத நூல்கள் கூறுகின்றன.

புண்ணிய நதிகளின் நீரிலும் அதன் மண்ணிலும் தெய்வங்களை இருக்கச் செய்து தூய்மைப்படுத்திக் கொள்வதே கும்பம் வைப்பதும், ஹோமம் செய்வதும் ஆகும். அதனால்தான் சௌனகரும் நான்கு தீய கிரஹங்களின் பிடியிலிருந்து விலகி பல காலம் வாழ்வதற்கு நீர் நிரம்பிய கும்பங்களில் தெய்வங்களை ஆவாஹனம் செய்து அபிஷேகம் செய்து கொள்வது எனவும், நெருப்பிலேயே துஷ்ட கிரஹங்களின் சக்தியை எரித்துவிட ஹோமம் செய்து கொண்டு ரட்சை தரித்துக் கொண்டு பல காலம் வாழ்வதற்கு எனவும், சாந்தி கர்மாவை வகுத்துக் தந்திருக்கிறார்.

திருமண நிகழ்ச்சிகளில் முகூர்த்தக்கால் ஊன்றுவது போலவும், மனை போடுவது போலவும் இந்த சஷ்டியப்த பூர்த்தி விழாவிலும் முகூர்த்தக் கால் ஊன்றியும், மனை போட்டும் விழாவினைத் தொடங்குவர். மனைக்கு முன்பாக 63 குடங்கள் வைப்பதற்குத் தோதாக ஒரு உயர்ந்த மேடையும் அதற்கு முன்பாக சதுர வடிவம், எண் கோண வடிவம், முக்கோண வடிவம் உள்ள 3 ஹோம குண்டங்களையும் படத்தில் காட்டியது போல செங்கற்களால் கட்டிப் பூசிவிடுவார்கள்.






(இவை மூன்றும் ஒன்றரை அடி உயரம் இருக்க வேண்டும்)

மனைக்கும், குடங்கள் வைக்கும் மேடைக்கும் அதற்கு முன்பாக உள்ள ஹோம குண்டங்களுக்கும் இடையே 3 அடி இடைவெளி இருக்க வேண்டும். இவற்றை சாந்தி செய்து வைக்கும் புரோகிதரிடம் கேட்டு அமைத்துக் கொள்வது நல்லது.

இப்படி மேடைகள் அமைத்து அதற்கு வெள்ளை மற்றும் காவி அடித்து வைத்துக் காய்ந்ததும், மங்கலப் பெண்கள் அந்த மேடைகள் மீதும் ஹோம குண்டங்கள் மீதும் கோலம் போட்டு அலங்கரிப்பார்கள். 63 குடங்கள் வைக்கும் மேடையின் நான்கு மூலைகளிலும் ஒவ்வொரு குத்துவிளக்கு வைத்தும், மேடையின் நான்கு மூலைகளிலும் ஒவ்வொரு குத்துவிளக்கு வைத்தும், மேடையின் மீது நெல், அரிசி முதலியவைகளைக் கொட்டிப் பரப்பி, 63 குடங்களுக்கும் வண்ண நூல்களால் அலங்கரித்துக் கொண்டு இந்தக் குடங்களில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி, தாமிரபரணி, சமுத்திர தீர்த்தம், வைகை,புஷ்கரணி, சரவணப் பொய்கை முதலிய புண்ணிய நதிகளின் நீரும் அதன் மண்ணும், மேலும் புற்றடி மண், முதலியவைகளையும் நிரப்பி, சுகந்தமான வாசனை திரவியங்கள் கலந்த நீரையும் சேர்த்து குடங்களில் நிரப்பி அதன் மேல் மாவிலை வைத்து, ஒவ்வொரு குடத்திற்கும் ஒவ்வொரு தேங்காய் வைத்து மேடையில் அழகாக

அடுக்கி வைப்பார்கள். குடத்திற்கு ஒரு மாலை வீதம் 63 மாலைகள் குடங்களுக்குச் சாத்தி, மேடையை மலர்களால் அலங்கரித்து வைப்பார்கள். இப்போது இத்தகைய புண்ணிய நதிகளின் தீர்த்தங்களைச் சேகரிப்பது சிரமமான காரியமாதலால் கண்டிப்பாக சமுத்திர தீர்த்தம், கங்கை, வைகை, காவிரி மற்றும் அண்மையில் உள்ள ஏதாவது ஒரு நதி இவற்றின் தீர்த்தங்களும் அதன் மண்ணும் சேர்க்க வேண்டியது அவசியம். இந்த சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவில் வைக்கும் கும்பங்களின் விவரம் :

1. மகா மிருத்யுஞ்ஜயர்
2. விஷ்ணு
3. மார்க்கண்டேயர்
4. அக்கினி
5. நிர்ருதி
6. குபேரன்
7. சூரியன்
8. அங்காரகன்
9. குரு
10. சனி
11. கேது
12. மகாபலி
13. பிர்மா
14. ருத்ரன்
15. இந்திரன்
16. யமன்
17. வாயு
18. ஈசானன்
19. சந்திரன்
20. புதன்
21. சுக்கிரன்
22. ராகு
23. அசுவத்தாமா
24. வியாசர்
25. அனுமான்
26. கிருபாச்சாரியார்
27. ஆயுள் தேவதை
28. பரணி
29. ரோஹிணி
30. திருவாதிரை
31. பூசம்
32. மகம்
33. உத்திரம்
34. சித்திரை
35. விசாகம்
36. கேட்டை
37. பூராடம்
38. திருவோணம்
39. சதயம்
40. உத்திராட்டாதி
41. அபிஜித்
42. சப்தரிஷி
43. விபீஷணன்
4. பரசுராமர்
45. அசுவதி
46. கார்த்திகை
47. மிருகசீர்ஷம்
48. புனர்பூசம்
49. ஆயில்யம்
50. பூரம்
51. ஹஸ்தம்
52. சுவாதி
53. அனுஷம்
54. மூலம்
55. உத்திராடம்
56. அவிட்டம்
57. பூராட்டாதி
58. ரேவதி
59. வருணன்
60. வருஷ தேவதை

ஆக 60 குடங்கள் என்று மகரிஷி சொல்லியிருக்கிறார். பின்னால் வந்த மகான்கள் திரிமூர்த்திகளின் சக்தியாக விளங்கும் துர்க்கா, சரஸ்வதி, லெட்சுமி மூன்றையும் சேர்த்து 63 கும்பங்கள் வைக்க வேண்டும் என்று வழி வகுத்தனர்.

இவைகளெல்லாம் சஷ்டியப்த பூர்த்தி விழாவிற்கு முதல் நாளே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். முதல் நாள் மாலை மங்கல வாத்தியம் முழங்க



மணிவிழா நாயகரும் நாயகியும் தங்கள் மகன்கள், மருமகன்கள், மகள்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள், உற்றார், சுற்றத்தினர் அனைவருடனும் ஊர்வலமாக ஊரில் உள்ள பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து வழிபட்டு, திரும்பி வீட்டுக்கு வந்து மனையில் அமர வேண்டும். தம்பதிகள் மனையில், அமர்ந்து கொண்டு தங்கள் மக்கள், மருமக்கள், பேரன், பேத்தி முதலியவர்களுக்குப் புத்தாடைகள் வழங்குவர்.

வாசனாதி திரவியங்கள், புண்ணிய நதிகளின் தீர்த்தங்கள், மணல் முதலியவைகளை நிரப்பிய குடங்களுக்கு ஆச்சாரியர் மூலமாகவும், வேத விற்பன்னர்கள் மூலமாகவும் அந்தந்த தெய்வங்களுக்குரிய மந்திர ஜப பாராயணமும், தேவாரப் பாராயணமும் செய்ய வேண்டும். புரோகிதர்கள் வேதபாராயணமும் மந்திரங்களும் ஜெபம் செய்த பின்னர் இந்த 63 குடங்களையும் அபிஷேகம் செய்த பின்னர், இவர்களுக்கு பலவிதமான தானங்களும், தெட்சிணையும் கொடுப்பார்கள். 63 குடங்களில் தம்பதியர் தங்கள் மக்களுக்காக கொடுக்க வேண்டும் என்றும் விரும்பினால் அவைகளை வெள்ளிக் குடங்களாகச் செய்து வைப்பர். மீதமுள்ள குடங்களை புரோகிதர்களுக்குத் தானமாக வழங்குவார்கள். பெரும்பாலான குடும்பங்களில் இந்தக் குடங்கள் உள்ளூர் சிவன் கோயிலில் வாடகைக்குத்தான் வாங்கி வைப்பார்கள். அப்படி வாடகைக்கு எடுத்து வந்திருந்தால் புரோகிதர்களுக்கு ஒரு குடத்திற்கு (இதனை அவர்கள் கலசம் என்றும் கூறுவார்கள்) இவ்வளவு ரூபாய் என்று கணக்கிட்டு ரொக்கமாகவே கொடுத்துவிடுவார்கள். இந்த குடங்களைப் பரப்பிய மேடையில் உள்ள அரிசி, நெல் முதலியவைகளைப் பிரதானமாக உள்ள புரோகிதர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். நல்ல வசதி படைத்தவர்கள் இந்தக் குடங்களை வாடகைக்கு வாங்காமல் புதிதாகவே செய்து வைத்து தானமாகக் கொடுத்து விடுவதும் உண்டு.

தம்பதியர் மறுநாள் காலை மறுபடி மனையில் வந்த அமர்ந்து கொண்டதும் வேத விற்பன்னர்கள் சதுர வடிவமுள்ள ஹோம குண்டத்தில் அரசம் சமித்தும், பசு நெய்யும் கொண்டு ஆயுஷ்ஹோமம் செய்தும், எண்கோண ஹோம குண்டத்தில் சீந்திக் கொடியும், பசு நெய்யும் கொண்டு மகா மிருத்தியுஞ்ஜய ஹோமம் செய்தும், முக்கோண வடிவ ஹோம குண்டத்தில் வெள்ளெருக்கு பொருசு, கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி, வன்னி, அருகம்புல் தர்ப்பை ஆகிய ஒன்பது சமித்துகளும், பசு, நெய்யுங் கொண்டு நவக்கிரஹ ஹோமம் செய்தும், பின்னர் பூர்ணாகுதி செய்ததும், தம்பதிகளின்

மக்கள், மருமக்கள், பேரன், பேத்தி, உற்றார், சுற்றத்தார் எல்லோரும் சேர்ந்து தம்பதிகளையும் ஹோம குண்டங்களையும் பிரதட்சணம் செய்து வணங்க வேண்டும். பின்னர் தம்பதியர் வாசலில் ஒரு நாற்காலி போட்டு அதில் அமர்ந்து கொள்ள அவர்களுடைய எல்லா உறவினர்களும் தம்பதி சமேதராய் வந்து கும்பங்களில் உள்ள நீரை அபிஷேகம் செய்ய வேண்டும். இதைத் தொடங்குவது வயதில் பெரியவராகவும் முடித்து வைக்க வேண்டியது மகன்களும் ஆவார்கள். தம்பதியரின் மகன்கள் தான் பிரதான குடத்தை அபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகம் முடிந்து, புத்தாடை அணிந்து தம்பதிகள் மீண்டும் மனைக்கு வந்து அதில் அமர்ந்துள்ள வயதான பிராமணத் தம்பதியருக்குப் புத்தாடை, திருமாங்கல்யம் முதலியவைகளைக் கொடுத்து அந்தத் தம்பதியர் தாலி கட்டி முடிந்ததும், மணிவிழாத் தம்பதியர் மனையில் அமர்ந்து கொள்வர். குறிப்பிட்ட நல்ல நேரத்தில் மீண்டும் ஒரு முறை முதலில் திருமணத்தின்போது இவர்கள் பயன்படுத்திய கழுத்துருவை இப்போது திருப்பூட்டப் பயன்படுத்துவர். திருப்பூட்டி முடிந்ததும், மணிவிழாத் தம்பதியர் தங்கள் மக்கள் உற்றார் உறவினர்களுக்கு அவர்கள் வந்து வணங்கிய பின் அட்சதை மற்றும் விபூதி, குங்குமம் கொடுக்க வேண்டும். பின் மங்கல வாத்தியங்கள் முழங்க உள்ளூரில் உள்ள சிவன் கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து சிவதரிசனம் செய்து கொண்டதும் மணிவிழா நிகழ்ச்சிகள் முழுமை அடைந்து விடும்.

இது போலவே 80 வயது முடிந்த 8வது மாதத்தில் அதாவது 1000 பிறைகள் பார்த்ததும் சதாபிஷேகமும் 100 வது வயதில் மகாபிஷேகமும் இந்த முறைப்படியே செய்து கொள்வார்கள்.



உ

சிவமயம்

# நகரக் கோவில்களின் விபரம்

**1. இளையாற்றங்குடி கோவில்**

சுவாமி பெயர் கைலாசநாதர் அம்மை பெயர் நித்யகல்யாணி

கல்வாசனாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில்

1. ஒக்கூருடையார் 2. அரும்பார்கியைாரான பட்டணசாமியார்
3. பெருமருதூருடையார் 4. கழனிவாசக்குடியார்
5. கிங்கினிக்கூருடையார் 6. பேரசெந்தூருடையார்
7. சிறுசேத்தூருடையார் ஆக வகை 7

கீழைச்சிவல் பட்டியிலிருந்து 3கி.மீ. தொலைவில் ஆவினிப்பட்டிச் சாலையில் அமைந்துள்ளது.

**2. மாற்றூர்க் கோவில்**

சுவாமி பெயர் ஐந்நூற்றீசர் அம்மை பெயர் பெரியநாயகி

கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்

1. உறையூருடையார் 2. அரும்பாக்கூருடையார்
3. மணலூருடையார் 4. மண்ணூருடையார்
5. கண்ணூருடையார் 6. கருப்பூருடையார்
7. குளத்தூருடையார் ஆக வகை 7

காரைக்குடிக்குக் கிழக்கே 6கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர்.

**3. வயிரவன் கோவில்**

சுவாமி பெயர் வளரொளிநாதர் அம்மை பெயர் வடிவுடையம்மை

கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில்

1. சிறுகுளத்தூருடையார் 2. கழனிவாசலுடையார்

3. மருதேந்திரபுரமுடையார் ஆக வகை 3

இதில் 1–வது சிறுகுளத்தூருடையார் வகுப்பில் மூன்று பிரிவுகள் அதாவது

1. பெரிய வகுப்பு 2. தெய்யனார் வகுப்பு (தெய்வநாயகர் வகுப்பு)

3. பிள்ளையார் வகுப்பு

திருப்பத்தூருக்குக் கிழக்கே 5கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

**4. இராணிக்கோவில்**

சுவாமி பெயர் ஆட்கொண்ட நாதர் அம்மை பெயர் சிவபுரந்தேவி

கல்வாசனாட்டில் இளையாற்றங்குடியான குலசேகர புரத்தில் இராணியூர் மருதங்குடியான ராஜநாறாயணபுரத்தில்

1. இராணியூர்த் திருவேப்பூருடையார்

கீழ்ச்சிவல்பட்டிக்கு அருகே 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

**5. பிள்ளையார்பட்டிக் கோவில் –** கற்பக விநாயகர்

சுவாமி பெயர் திருவீசர்

அம்மை பெயர் சிவகாமவல்லி

சுவாமி பெயர் மருதீசர்

அம்மை பெயர் வாடாமலர் மங்கை

கல்வாசனாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங் குடியான ராஜநாறாயணபுரத்தில்

1. பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்

காரைக்குடி திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் குன்றக்குடிக்கும் வைரவன்பட்டிக்கும் இடையே அமைந்துள்ளது இவ்வூர்.

**6. நேமங் கோவில்**

சுவாமி பெயர் ஜெயங்கொண்ட சோளீசர் அம்மை பெயர் சவுந்தரநயாகி

கேரளசிங்க வளநாடாகிய நேமமான குலசேகரபுரத்தில் தேனாறுபாயும்

1. இளநலமுடையார்

குன்றக்குடிக்கு அருகே கீழைச்சிவல்பட்டிக்கு செல்லும் வழியில் அமைந்துள்ளது.



**7. இலுப்பைக் குடிக்கோவில்**

சுவாமி பெயர் தான்றோன்றியீசர் அம்மை பெயர் சவுந்தரநாயகி

கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக்குடியான புகழிடங்கொடுத்த பட்டிணத்தில்

1. சூடாமணிபுரமுடையார்

காரைக்குடிக்குக் கிழக்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

**8. சூரைக்குடிக் கோவில்**

சுவாமி பெயர் தேசிகநாதர் அம்மை பெயர் ஆவுடைநாயகி

கேரளசிங்க வளநாடாகிய சூரைக்குடியான தேசிகநாளாயணபுரத்தில்

1. புகழ்வேண்டிய பாக்கமுடையார்

பள்ளத்தூருக்குத் தெற்கே 3கி.மீ. தொலைவில், பூவாண்டிப்பட்டி கிராமத்திற்கு அண்மையில் உள்ளது.

**9. வேலங்குடி கோவில்**

சுவாமி பெயர் கண்டீசுவரர் அம்மை பெயர் காமாக்ஷியம்மை

கேரளசிங்க வளநாடாகிய பாலையூர் நாட்டில் வேலங்குடியான தேசிகநாறாயண புரத்தில்

1. கழனி நல்லூருடையார்

கோட்டையூருக்கு அருகே வேலங்குடியில் அமைந்துள்ளது.

# நகரத்தார் குடும்ப சிறப்பு நிகழ்ச்சிகள்

ஒரு குழந்தையை தாய் வயிற்றில் உருவானதிலிருந்து, அக்குழந்தை பிறந்து வளர்ந்து, வாழ்ந்து வரும்வரை நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தியுள்ளோம்.

**தீர்த்தம் அல்லது மருந்து குடித்தல் :**

நகரத்தார் குடும்பங்களில் மணமான பெண் தலைக் குழந்தைக்காகக் கருவுறும்போது நடைபெறும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி இது. கருவுற்றதிலிருந்து ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் இது நடைபெறும். கருவுற்ற பெண்ணின் தாத்தார் நாட்டு மருந்து இடித்து கொடுப்பது அல்லது புனித தீர்த்தத்தை கருவுற்ற பெண்ணிற்கு கொடுப்பதுதான் இந்நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியில் பங்காளிகளும், உறவினர்களும் கலந்து கொள்வார்கள்.

**பிள்ளை பெறக் கூட்டுதல் :**

கரு வளர்ந்த பிறகு அதன் ஏழு அல்லது ஒன்பதாவது மாதத்தில் கருவுற்ற தாயை அவனது தாய் வீட்டார் பிள்ளை பெற அழைத்துச் செல்லும் சிறப்பு விழா.

**பேறு கேட்டல் :**

குழந்தை பெற்ற மகிழ்ச்சியை உறவினரும், பங்காளிகளும் வந்து கேட்டு மகிழ்வதைப் பேறு கேட்டல் என்று வழங்குவது நகரத்தார் மரபு உறவினர்களும் பங்காளிகளும் 'பேரன் பிறந்திருக்கிறானே' என்றோ 'பேத்தி பிறந்திருக்கிறாளே' என்று கேட்டு மகிழ்வது தான் இந்நிகழ்ச்சி.

**பிள்ளை பார்க்க வருதல் :**

பிறந்தது தலைக் குழந்தையாக இருப்பின், பிள்ளையின் அப்பத்தான் வீட்டினர், தமக்கு மிக நெருங்கிய உறவினர்களுடன் பிள்ளையை பார்க்க ஆயாள் வீட்டிற்கு வருவது இந்நிகழ்ச்சி. வருபவர்களுக்கு அங்கே விருந்த நடைபெறவும்.



**பிள்ளையை அழைத்துச் செல்லுதல் :**

பிள்ளை பிறந்து ஒரு மாத மானதும் பிள்ளையையும், தாயையும், ஆயாள் வீட்டிலிருந்து அப்பத்தாள் வீட்டிற்கு அழைத்துச் செல்லுவது இந்நிகழ்ச்சி. பிறந்தது தலைப்பிள்ளையாக இருப்பின் இரு பக்கத்திலும் நெருங்கிய உறவினர்கள் அழைக்கப்பட்டு விருந்து நடைபெறும்.

**பிள்ளைக்கு காது குத்தல் :**

பிள்ளை பிறந்து பதினாறாவது அல்லது இருபத்தொராவது நாளில் ஆயாள் வீட்டில் பிள்ளைக்கு காது குத்தித் தோடு அணிவிக்கப் பெறும் நிகழ்ச்சி.

**பெயர் வைத்தல் :**

பிள்ளை பிறந்த முப்பதாவது நாளில் குடும்ப பெரியவரால் பிள்ளையை பெயர் சொல்லி அழைக்கச் சொல்லுவர். அல்லது குலத்தெய்வக் கோவிலுக்கு பிள்ளையை கொண்டு சென்று அங்கே அர்ச்சகரால் முதன் முதலில் பெயர் சொல்லி கூப்பிடச் சொல்லுவர்.இந்நிகழ்ச்சியே பெயர் வைத்தல்.

**முதல் முடி எடுத்தல் :**

அந்தந்தக் குடும்பத்தின் பழக்கத்திற்கு ஏற்ப, பிள்ளை பிறந்து ஒரு மாதம் அல்லது ஆறுமாதம் அல்லது ஓராண்டு முடித்ததும் பிள்ளைக்கு முதல் முறையாக முடி எடுப்பார்கள். இது நிகழும் இடமும் அக்குடும்பப் பழக்கத்தைப் பொறுத்தது.

**தொட்டில் கட்டுதல் :**

நகரத்தார் வாழும் ஊர்களிலெல்லாம் கோவில் திருவிழாக்களில் பிள்ளைக்குத் தொட்டில் கட்டுதல் என்பது ஒரு சிறப்பு நிகழ்ச்சி. பணியாளர்கள் கரும்பைத் தூக்கிக் கொள்ள, அக்கரும்பில் சேலை பொட்டு, தொட்டிலைத் தூக்கிக் கொண்டு, மேளதாளத்துடன் கோவிலை வலம் வருவது இந்நிகழ்ச்சி.

**விளையாட்டுப் பெட்டி வேவு :**

இது தலைப் பிள்ளைக்கு மட்டுமே நிகழும். சிறப்பு நிகழ்ச்சி. தலைப்பிள்ளை பிறந்து சில மாதங்களுக்குப் பிறகு, ஆயாள் வீட்டினர், நெருங்கிய உறவினர்கள், பங்காளிகளோடு, அப்பத்தான் வீட்டிற்கு வந்து விளையாட்டுப் பெட்டி வேவு எடுப்பர். அப்பத்தாள் வீட்டிலும் நெருங்கிய

உறவினர்கள், பங்காளிகள் அழைக்கப் பெற்று குழுமியிருப்பர். அவர்கள் வேவு இறக்கிக் கொள்வர்.

**பிறந்த நாள் விழா :**

ஆங்கில நாகரிகத்தின் விளைவாக, பிறந்த நாள் விழா கொண்டாடுவது அனைத்து சமூகங்களிலும் ஒரு பழக்கமாகிவிட்டது. நகரத்தார் சமூகத்திலும், தலைப் பிள்ளையின் முதலாண்டு நிறைவு நாள் ஓரளவு சிறப்பாக உறவினர்கள், நண்பர்களை அழைத்துக் கொண்டாடப்படுகிறது.

**கிலுக்கி எடுத்தல் - அம்பு போடுதல் :**

பிறந்த பிள்ளை ஆண்பிள்ளையாக இருப்பின் அதன் இளமைக்காலம் முழுவதும் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம், மகர் நோன்பு விழாவில் தொடக்க நாளன்று கிலுக்கியெடுப்பும், இறுதி நாளன்று அம்பு போடுதலும் நடைபெறும்.

**கொப்பி கொட்டுதல் :**

பிறந்த பிள்ளை பெண் பிள்ளையாக இருப்பின் அதன் இளமைக்காலம் முழுவதும் ஆண்டுதோறும் தை மாதம் மாட்டுப் பொங்கலன்று கொப்பி கொட்டுதல் நடைபெறும்.

பொங்கலன்று விளக்குச் சட்டியில் வைத்துக் கும்பிடும் பொருட்களை மறுநாள் மாட்டுப் பொங்கலன்று சிவன் கோவிலுக்கு எதிரில் உள்ள பொட்டலுக்கு எடுத்துச் சென்று இளம் பெண்கள் எல்லாம் ஒன்று கூடி நாம் கொண்டு வந்த பொருட்களை நடுவில் வைத்து வட்டமாகச் சுற்றி கும்மி கொட்டுவர். பின்னர் கோவிலுக்குச் சென்று வழிபட்டுத் திரும்புவர். இதுவே கொப்பி கொட்டுதல்.

**சடங்கு கழித்தல் :**

ஒரு பெண் பூப்பெய்தியவுடன் அவளுக்கு உள்ள தீட்டை கழிப்பதற்காக நிகழ்த்தும் சடங்கு இது. அன்று அவள் குளித்ததும் அவளுடைய அத்தையால் இச் சடங்கு நடத்தப்படும்.

**பழந்தேங்காய் கொடுத்தல் :**

மாப்பிள்ளையின் ஊரில் அல்லது பெண்ணின் ஊரில் கோவிலில் திருவிழா நிகழும் போது பெண்ணின் தாய் வீட்டினர் பிள்ளையின் தாய் வீட்டினருக்குப் பழமும் தேங்காயும் கொடுத்து விருந்து வைப்பது இந்நிகழ்ச்சி.



**முதலாண்டு தீபாவளிக்கு வருதல் :**

திருமணம் நிகழ்ந்த பின்வரும் முதலாண்டு தீபாவளிக்கு, மணமக்களை, பெண்ணின் தாய் வீட்டினர் அழைத்து, அவர்களுக்கு புத்தாடை கொடுத்து விருந்து வைத்துச் சிறப்பிப்பது இந்நிகழ்ச்சி.

**பொங்கற்பானை கொடுத்தல் :**

திருமணம் முடிந்த பின் வரும் முதற் பொங்கலிலிருந்து ஆண்டு தோறும் பொங்கலை முன்னிட்டுத் தாய் வீட்டிலிருந்து பெண்ணுக்கு அளிக்கப்படும் சிறப்புச் சீர்.

பொங்கலுக்குச் சில நாட்கள் முன்பு, பொங்கற்பானை, பொங்கல் வைக்கப் புத்தரிசி, கரும்பு, வெல்லம், மஞ்சள் கொத்து, காய்கறி இவற்றோடு ஒரு தொகையையும் வைத்து பெண்ணின் தந்தையும், சகோதரனும் பெண்ணின் மாமியார் வீட்டுக்கு எடுத்து செல்வது இந்நிகழ்ச்சி. அடுத்த இரண்டு ஆண்டுகட்கும் இதுபோலவே பெண்ணின் மாமியார் வீட்டிற்கு கொண்டுபோய் கொடுக்க வேண்டும். மூன்றாண்டுகள் முடிந்தவுடன் பெண்ணின் தந்தை அவருக்குப் பிறகு உடன் பிறந்தோர் அவர் தம் ஆண்மக்கள் எனத் தாய் வீட்டு வழி முறையினர் பெண் அல்லது மாப்பிள்ளை இருக்கும் வரை பொங்கற்பானைக்கு என ஒரு தொகை கொடுத்து வரவேண்டும். பொங்கற்பானைக்கு நேரில் தொகை கொடுக்கும் பொழுது பாக்குக்கு என்று பாக்குக்கு பணம் திருப்பிக் கொடுப்பது பழக்கம்.